Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 07 | வெள்ளிக்கிழமை 03 டிசெம்பர் 2021 | கார்த்திகை 17 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

# இலங்கையிலும் ஒமிக்ரோன் பரவக்கூடிய அபாயநிலை!

## தடுப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தக் கோரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 3

இந்தியாவின் கர்நாடகப் பகுதியில், கொரோனா திரிபான ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுநோய் அடையாளம் காணப்பட்டுள்ளநிலையில், இலங்கைக்கும் அது பரவக்கூடிய சாத்தியம் உள்ளது என்று கூறப்படுகின்றது. எனவே, அதனைக் கையாள்வதற்கான செயற்றிட்டங்கள் உடனடியாக வகுக்கப்படவேண்டும் என்று சுகாதாரக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைவர் மருத்துவநிபுணர் ரவீந்திர ரன்னன் எலிய வலியுறுத்தியுள்ளார். 15

## யாழ். நல்லூரிலும் சிலிண்டர் வெடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் வீடு ஒன்றில் நேற்று எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியது. மதிய உணவு தயாரித்துக்கொண்டிருந்தபோது அடுப்பு வெடித்தது என்று தெரிவிக்கப்பட் 15



## நேற்றும் 2 சடலங்கள் ஒதுங்கின

யாழ்ப்பாணம், டிசெ. 3

வடமராட்சி, பருத்தித்துறை கோவளம் பகுதியிலும், மருதங்கேணி சுண்டிக்குளம் கடற்கரையிலும் உருக்குலைந்த 15



## ஒதியமலைப் படுகொலை: உணர்வுபூர்வ நினைவஞ்சலி

முல்லைத்தீவு, டிசெ. 3

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களில் ஒன்றான ஒதியமலைப் பகுதியில், 32 பேரை இராணுவத்தி 15

## தொற்று - 735 சாவு 27

கொழும்பு, டிசெ. 3

இலங்கையில் நேற்று 735 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச 15

### முச்சந்தி முரளி

"அப்ப வாறவருசம் முழுக்க ஒமிக்ரோன் எங்கட வாழ்க்கையில கண்டிய டான்ஸ் ஆடப்போகுது எண்டு சொல்லுங்கோ"



## கடற்படையினருக்கு காணி வழங்குவதாக கூறவில்லை

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3

"மாதகல் பகுதியில், காணிகளை கடற்படைக்கு வழங்குவதாக நான் ஒருபோதும் கருத்து தெரிவிக்கவில்லை" என்று, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார். காணி அளவீட வரும் அலுவலர்களுக்கு மக்கள் இடையூறு விளைவித்தால் கைது செய்ய வேண்டிவரும் 15



## 'ஆரியகுள மகிழ்வூட்டும் திடல்' சம்பிரதாயபூர்வமாகத் திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3

யாழ்ப்பாண மாநகரசபையால் கடந்த ஆறு மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த ஆரியகுள அபிவிருத்திகள் 04



## கண்டிய நடனத்துடன் விகாராதிபதியை அழைத்துவந்த ஆளுநர்

யாழ்ப்பாணம், டிசெ. 3

யாழ். 'ஆரியகுளம்' நேற்று மாலை 5.30 மணியளவில் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில், பிரதம 04

## கண்டிய நடனத்துக்கும் சபைக்கும் சம்பந்தமில்லை

### யாழ். மாநகர முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3

யாழ். ஆரியகுள திறப்பு நிகழ்வுக்கு கண்டிய நடனம் ஏற்பாடுசெய்யப்பட் 04

## காணி சுவீகரிப்புக்கு எதிராக 2 ஆவது நாளும் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

மாதகல் மக்கள் தமது காணி சுவீகரிக்கப்படுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இரண்டாவது நாளாகவும் நேற்று கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். இந்தப்போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள், "எமது நிலம் எமக்கு வேண்டும்! வடக்கும் கிழக்கும் எமது 15

### மேல் மாகாண முன்னாள் ஆளுநர்

## அசாத் சாலி விடுதலை 3 எம்.பிக்களுக்கு 'ஆப்பு'

கொழும்பு, டிசெ. 3

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிரான வழக்கிலிருந்து, அவர் நேற்று விடுதலைசெய்யப்பட்டார். அவருக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத் 15

## "சுட்டுக்கொன்றுவிட்டு அத்துமீறல் என்று கூறுவேன்"

### உதயன் ஊடகவியலாளரை துப்பாக்கி முனையில் மிரட்டிய பொலிஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 3

பருத்தித்துறையில் செய்தி சேகரிக்கச்சென்ற உதயன் செய்தியாளர் ஒருவரை, நீதிமன்ற வாயிலில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், அச்சுறுத்தியுள்ளார். அதுமட்டுமன்றி, பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து ஊடகவி[illegible] துப்பாக்கியைக் காண்பித்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அச்சுறுத்தினார். இது தொடர்பில் பொலிஸில் [illegible] 15

செலான் வங்கியில்
தங்கப்பவுணுக்கு அதிகபட்ச முற்பணத்தொகை
ரூ. 87 000/=
குறைந்த வட்டி வீதத்தில்
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது 0779811456 ஐ அழையுங்கள்
யாழ்ப்பாணம், நெல்லியடி மற்றும் வவுனியா கிளைகளில் சனிக்கிழமைகளிலும் தங்கக்கடன் சேவை இடம்பெறும்
செலான் தங்கக்கடன்
Brand Finance Rating "A+" Fitch Rating: "A"(lka)
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா சென்று வருவோரால் மன்னாரில் எச்.ஐ.வி. அபாயம்

**மன்னார்,டிசெ.3**

**இந்தியாவுக்கு சட்ட விரோதமாக கடல் வழியாகச் சென்று திரும்புபவர்கள் மற்றும் போதைப்பொருள் பாவனையாளர்களால் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி. தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்று பாலியல் நோய் மற்றும் எச்.ஐ.வி. விசேட மருத்துவ அதிகாரி தக்சாயினி மகேந்திர நாதன் தெரிவித்தார்.**



உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு, மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை 11 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு தொற்றாளர் இவ்வருடம் 2021 அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தொற்றைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறையினர் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். குறித்த நடவடிக்கைகளுக்கு மக்களுடைய ஆதரவை எதிர் பார்த்துள்ளோம். மக்கள் இவ்விடயத்தில் விழிப்புடன் செயற்பட்டு சுகாதாரத் துறைக்கு ஆதரவு வழங்க வேண்டும்- என்றார். கருத்தரங்கில் மருத்துவர்கள், அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள், பொலிஸார் கலந்து கொண்டனர்.(ஒ-4,56)

# மின்தடை

யாழ்ப்பாணம், டிசெ.3

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ் .மாவட்டத்தில்** கலைவாணி வீதி பந்திங் சென்டர், கோப்பாய் கல்வியியல் கல்லூரி, கோண்டாவில் நீர்வழங்கல்சபை, கோப்பாய் இராணுவ முகாம், இராஜேஸ்வரி மண்டபம், பல்கலைக்கழக விடுதி, கலைவாணி திருநெல்வேலி, கோண்டாவில் கிழக்கு, கிருஷ்ணன் கோவிலடி, பொற்பதி, புகையிரத நிலைய வீதிச் சந்தி, இராஜவீதி சந்தி, இராஜவீதி கோப்பாய், திருநெல்வேலி, வாமாஸ் வீதி, சுப்பர்மடம் ஐஸ்தொழிற்சாலை, மந்திகை மருத்துவமனை, தொலைத்தொடர்பு நிலையம் மாலுசந்தி, இலகடி, இன்பருட்டி, காந்தியூர், மாலுசந்தி , மந்திகை அம்மன் கோவில், அல்வாய், நாவலடி, ஸ்ரீலங்கா பாடசாலையடி, வியாபாரிமூலை, திக்கம், தேவரையாளி வதிரி, மனோகரா, வதிரி அரசடி , கட்டைக்காடு 55ம்பிரிவு இராணுவ முகாம், ஆழியவளை, கட்டைக்காடு, கேவில், முள்ளியான், உடுத்துறை, வத்திராயன், வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி முள்ளியான் இராணுவ முகாம், வெற்றிலைக்கேணி கடற்படைமுகாம் ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி மாவட்டத்தில்** வற்றாப்பளை இராணுவ முகாம் எரிபொருள் நிரப்புநிலையம், வற்றாப்பளை விசேட அதிரடிப்படை தலைமையகம், வற்றாப்பளை, கேப்பாப்பிலவு, முள்ளியவளை, பிலாக்குடியிருப்பு ஆகிய இடங்களிலும்,

**வவுனியா மாவட்டத்தில்** ஆச்சிபுரம், ஆசிக்குளம், எல்லப்பர்மருதங்குளம், எல்லப்பர்மருதங்குளம் .கோவிலடி, கற்குளம் (சிதம்பரபுரம்),கூமரசங்குளம் மாதாகோவிலடி, மகாமயிலங்குளம், மதுரநகர் கல்நாட்டினகுளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் மாவட்டத்தில்** அச்சம்குளம், அடம்பன், அகத்திமுறிப்பு , அகத்திமுறிப்புதிட்டம், அளவக்கை, அளவக்கை சிறுகுளம் திட்டம், ஆண்டாங்குளம், அரிப்பு, அரிப்பு நீர் வழங்கல், ஆத்திமோட்டை, அறுகுக்குன்று நொச்சிக்குளம், ஆத்திக்குழி, ஆவணம் வஞ்சியங்குளம், செம்மண் தீவு, இலந்தைமோட்டை, எருவிட்டான், ஹனைஸ்நகர், இத்திக்கண்டல், கண்ணாட்டி, கரடிக்குழி, கறுக்காய்குளம், காயக்குழி திட்டம், கொக்குப்படையான், கொண்டச்சிதிட்டம், கொண்டச்சிநீர்வழங்கல்சபை, கொண்டச்சிசிங்கள கிராமம், கூழாங்குளம், கூழாங்குளம் திட்டம் (ஜீநாத்நகர்), குருவில், மடுக்கரை, மணல்குளம், மாந்தை சந்தி (திருக்கேதீஸ்வரம்கிராமம்), மறிச்சுக்கட்டி, மருதமடு, மாதோட்டம், மாவிலங்கேணி, மேதன்வெளி, மினுக்கன், முள்ளிக்குளம், முருங்கன், முருங்கன்பிட்டி, முசலி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பல்கலை ஊழியர் சங்கம் தொழிற்சங்கப் போராட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் சம்பள முரண்பாடு மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி, அடையாள மௌன தொழிற்சங்கப் போராட்டம் இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கமும், பல்கலைக்கழக முன்றிலில், நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டது.

கொரோனா சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"யு.ஜி.சி. நிர்வாகிகளே கல்வி சாரா ஊழியர்களின் பிணக்குகளுக்கு தீர்வை வழங்குங்கள், 107வீத சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும் குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்து, பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வை வழங்கு! "போன்ற சுலோகங்களையும் பதாகைகளையும் கையில் ஏந்தியிருந்தனர்.

இதன்போது ஊழியர் சங்கத்தின் தலைவர் சிவரூபன் தெரிவிக்கையில், நீண்ட காலமாக தீர்க்கப்படாத பிரச்சினைகள் பல உள்ளன. ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி குறைப்பு, ஓய்வூதியம், ஊழியர்களின் ஆள்சேர்ப்பு, பொதுவான காப்புறுதித் திட்டம், கடன் வசதிகள் உள்ளிட்ட பிரச்சினைகளைத் தீர்க்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்- என்றார்.

அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்க கூட்டுக்குழு இணைப்புச் செயலாளர் யசோதரன் தெரிவிக்கையில், தொடர்ச்சியான போராட்டத்துக்கு இது ஒரு ஆரம்ப புள்ளியாகக் கருதுகின்றோம். எங்களுடைய பிரச்சினைக்கு உயர்கல்வி அமைச்சர் தீர்வு பெற்றுத் தர வேண்டும். நாங்கள் பொது நிர்வாக சேவைக்கு சமமான சம்பள அளவையும், தகுதிகளையும் கொண்டிருந்த போதிலும் எங்களுக்கு உரிய சரியான நியாயப்பாடுகள் வழங்கப்படவில்லை. எங்களுக்குத் தேவையான அனைத்துமே போராட்டத்துக்குப் பின்னர் தான் கிடைக்கின்றது- என்றார். (ஒ-4,125,27)



# சிற்றுண்டிகளின் விலை 5 ரூபாவால் அதிகரிப்பு

சாவகச்சேரி,டிசெ.3

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சிற்றுண்டி விற்பனை நிலையத்தில், சிற்றுண்டிகளின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த 3 வருடங்களாக அனைத்து சிற்றுண்டி வகைகளும், தேநீரும் பத்து ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தன.

தற்போது உற்பத்திப் பொருள்களின் விலை அதிகரிப்பை அடுத்து தேநீர் மற்றும் சிற்றுண்டி வகைகள் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 15 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4,9)

# ஆனந்தனுக்கு நினைவஞ்சலி

யாழ்ப்பாணம்,டிசெ.3

மறைந்த எழுத்தாளர் இணுவையூர் கே.எஸ்.ஆனந்தனுக்கான அஞ்சலி நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், நினைவுரைகளை சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், இணுவில் கலை இலக்கிய வட்டத் தலைவர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன், கவிஞர் வீரா, ஆசிரியர் ந. தவ சோதிநாதன் ஆகியோர் ஆற்றுவர். (ஒ-4)



# கல்விசாரா ஊழியர்கள் வவுனியாவில் போராட்டம்

வவுனியா,டிசெ.3

வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை உடனடியாக தீர்ப்பதுடன், முன்னமே தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் அதிகரிப்பை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைக்களுக்குத் தீர்வை வழங்கு, சம்பள அதிகரிப்பை உடனடியாக நடைமுறைப்படுத்து, சம்பள முரன்பாட்டைத் தீர்க்கும் குழுவின் அறிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்து போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். (ஒ-4,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் ஆரம்பம்

**யாழ்ப்பாணம்,டிசெ.3**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, தீவிரப்படுத்தும் நோக்குடன் எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதி நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.**



அதற்கமைவாக பிரதேச மட்ட டெங்குத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தை ஒழுங்கு செய்து, நிறுவனங்களையும், கிராம மட்ட அமைப்புக்களையும் இணைத்து நுளம்புக் கட்டுப் பாட்டு வார நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல், கிராம மட்ட டெங்குத் தடுப்பு செயலணிக் குழுக் கூட்டத்தை கிராம அலுவலர் தலைமையில் ஏற்பாடுசெய்து கிராம மட்ட அமைப்புக்களை நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல், சகல நிறுவனங்கள், மருத்துவமனைகள், பொது இடங்கள், வணக்கஸ்தலங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள் மற்றும் பராமரிப்பற்ற காணிகளை நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கு உட்படுத்தல், பாடசாலைகளில் மாணவர்களின் உதவியுடன் குறைந்தது காலை இரண்டு மணித்தியாலங்கள் சிரமதானம் மூலம் பாடசாலை வளாகத்தை துப்பரவு செய்தல், நுளம்புக் கட்டுப் பாட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து ஆலோசனைகளை வழங்குவதற்கு ஒழுங்கு படுத்தப்பட்ட குழுக்கள் வீடுகள், நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களை தரிசிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்ட நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் மற்றும் அதில் பங்கு பற்றிய உத்தியோகத்தர்களின் விவரங்களை சுகாதார மருத்துவ அதிகாரி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக மாவட்டச் செயலருக்கும், மாகாண சுகாதார திணைக்களத்துக்கும் அனுப்புதல் ஆகிய செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.


எனவே சகலரும் ஆட்கொல்லி டெங்குத் தொற்றிலிருந்து பாது காப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று யாழ்.மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (ஒ-4,159)

## மன்னார் காற்றாலை தொடர்பில் பேச்சு

கொழும்பு, டிசெ.3

மன்னார் காற்றாலை மின் திட்டத்துக்கான முதலீட்டு வாய்ப்பு தொடர்பான பேச்சுக்கான மருபேனி கூட்டுத்தாபனத்தின் ஆசியாவுக்கான நிறைவேற்று முகாமைத்துவக்குழு இலங்கைக்கு வந்துள்ளது. இந்தக் குழுவினர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் நிதி அமைச்சர் ஆகியோரை சந்தித்தனர்.

67 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானமுடைய மற்றும் 160 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட மருபேனி கூட்டுத்தாபனம் புதுப்பிக்கத்தக்க சக்தி, ஆடை மற்றும் விவசாயம் தொடர்பான வணிகங்களில் நிபுணத்துவம் பெற்றதாகும். இலங்கையில் மின்சார முச்சக்கரவண்டி வாகனங்களை அறிமுகப்படுத்துவதுடன், மின்சார வாகனத்தை சார்ஜ் செய்யும் வலையமைப்பை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளையும் ஆராய வேண்டும் என்றும் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. (எ-இ)



## 'தமிழ் மரபுத் திங்கள்' ஆகியது ஜனவரி மாதம்

லண்டன், டிசெ. 3

ஜனவரி மாதத்தை 'தமிழ் மரபுத் திங்கள்' (Tamil Heritage Month) என பிரகடனப்படுத்தும் பிரேரணை லண்டன் அஸெம்பிளியில் (லண்டன் பெருநகர அவை) நேற்று நிறைவேற்றப்பட்டது.


கன்ஸர்வேடிவ் அஸெம்பிளி உறுப்பினர் நிக் றொஜர்ஸ் இது குறித்து முன்மொழிந்தார். அது விவாதிக்கப்பட்டு அனைத்து உறுப்பினர்களும் அதற்கு ஆதரவு தெரிவித்தனர். அதனையடுத்து, ஜனவரி மாதத்தை 'தமிழ் மரபுத் திங்கள்' என பிரகடனப்படுத்தும் பிரேரணை ஏகமனதானக நிறைவேற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## அநாதரவான முதியவர்

கிளிநொச்சி,டிசெ.3

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் உறவினர்களால் கைவிடப்பட்ட நிலையில், கிளிநொச்சி பேருந்து நிலையத்தை தஞ்சமடைந்துள்ளார்.

அவரது முதுமையைக் கருதி சமூக ஆர்வலர்கள் அல்லது சமூக அமைப்புக்கள் அவரைப் பொறுப்பெடுத்து அவருக்குரிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-4)






நேற்று ஆரியகுளம் மகிழ்திடல் திறப்பு விழா. பட்சி நேற்றுச் சொன்னமாதிரி , அரசமரக் கொப்பு வெட்டினதுக்கு நாகவிகாரைப் பிக்கு ஏதும் கொளுவல் எடுப்பார் எண்டு மாநகரசபைக்காரர் எதிர்பார்த்தவர். ஆனால் ஆள் ஒரு அசுமாத்தமும் காட்டேலை. சரி, பிக்குவுக்கு புத்தர் ஞானம் குடுத்திட்டார்போல எண்டு எல்லாரும் அந்த விசயத்தை மறந்திட்டு, திறப்புவிழாவை திறமாச் செய்யோனும் எண்டு ஒவ்வொரு அலுவல்களில இறங்கிட்டினம்.

பின்னேரம் அஞ்சுமணிபோல திறப்புவிழாவுக்கு எல்லாம் ரெடி. அப்பதான் திடீரெண்டு ஆரியகுளம் விகாரைப் பக்கமா மேளதாளச் சத்தங்கள் கேக்கத் தொடங்கிச்சு.

'என்னடா இது? எங்கட லிஸ்ட்டிலயே இது இல்லையே'எண்ட மாதிரி, முனிசிபல்காரர் எல்லாரும் ஆணியடிச்சமாதிரி நிக்க, நாகவிகாரைப் பிக்குவைக் கூட்டிக்கொண்டு , வடக்கு ஆளுநர் கண்டியன் டான்ஸ்காரர் புடைசூழ வந்துகொண்டிருந்தார். இத்தனைக்கும் திறப்புவிழா அழைப்பிதழ்ல கூட நாகவிகாரை ஆமத்துறுவின்ர பேர் போடுப்படேலை. அப்பிடி ஒரு அழையா விருந்தாளியைத்தான், ஆளுநர் கண்டியன் டான்ஸ் வரவேற்போட தடல்புடலாக் கூட்டிக்கொண்டு வந்தார். ஒருமதகுருவை இப்பிடி ராஜ மரியாதையோட இதுவரைக்கும் எங்கையும், ஆரும் கூட்டிக் கொண்டு வந்ததில்லை. ஒருகதைக்கு தலதா மாளிகைக்கு பக்கத்தில உள்ள நீர்த்தேக்கத்தில இப்பிடி ஒரு திறப்பு விழாவுக்கு, எங்கட பரதநாட்டியத்தோடயோ, மேளக்கச்சேரியோடயோ ஐயர் மாரைக் கூட்டிக்கொண்டு போவினமோ? கனவிலையும் உது நடக்காதுதானே. அப்ப பிறகென்னத்துக்கு பிக்குவை இப்பிடி ஐஸ்பண்ணி கூட்டிக் கொண்டு வரவேணும்?

'ஆரியகுளத் திறப்புவிழாவுக்கு எதுக்கு கண்டியன் டான்ஸ்? இவ்வளவு நேரமும் இந்த ஆரியகுளத்தை திருத்தி, வடிவாக்கின மணி, இப்பிடி ஒரு வேலையைச் செய்து எல்லாத்தையும் கெடுத்துப் போட்டாரே' எண்டு விழாவுக்கு வந்த பொதுசனத்தின்ர முகமெல்லாம் கறுத்துப் போச்சு. ஆனால் இந்தக் கண்டியன் டான்ஸ் வரவேற்புக்கும் , முனிசிபல் மேயர் மணிக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை எண்டு அவரே சொல்லியிருக்கிறார். 'நாங்கள் பிக்குவுக்கு அழைப்பும் விடேலை, கண்டியன் டான்ஸையும் ஒழுங்கு பண்ணேலை. எல்லாம் ஆளுநர்தான் செய்திருக்க வேணும். ஒரு நல்ல நிகழ்வு நடேக்கேக்க ஒரு பிக்கு வந்தால், அழைப்புக் குடுத்தமோ இல்லையோ அவரை வரவேற்கத்தானே வேணும். அதைத்தான் செய்தமே தவிர, நாங்கள் பிக்குவைக் கூட்டியரச் சொல்லியோ, கண்டியன் டான்ஸ் ஆடவோ ஒழுங்கு செய்யவேயில்லை' எண்டு கற்பூரம் அடித்துச் சத்தியம் செய்யாத குறையாகச் சொன்னார் மணிவண்ணன்.

அப்ப இந்த பிக்குவை கண்டியன் டான்ஸோட ராஜமரியாதை குடுத்துக் கூட்டியந்ததுக்கு காரணம் ஆளுநர் தான். ' எதுக்கு ஆரியகுளம் திருத்தேக்க பிக்குவோட சண்டை பிடிக்கவேணும், எல்லாரையும் அனுசரிச்சு , எல்லாரும் ஒற்றுமையா இருக்கோனும்' எண்டதுக்காகத்தான் பிக்குவுக்கு பிடிச்ச கண்டியன் டான்ஸோட போய், ஆளுநர் நாகவிகாரை ஆமத் துறுவைக் கூட்டிக்கொண்டு வந்தவர் எண்டு அவரின்ர பக்கத்துக்கு ஆக்கள் சொல்லுகினம்.

இப்பிடி ஆளாளுக்கு ஒவ்வொண்டு சொல்லுகினம். இதில எது உண்மை? எது உருட்டு? எப்பிடித்தான் கண்டுபிடிக்கிறது எண்டு தெரியவே இல்லையே...



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஊடகங்களால்
# ஆட்சியை மாற்றமுடியும் அரசைப் பாதுகாக்கமுடியாது

## ஊடகங்களுடன் பணியாற்றுவது ஒரு கலை என்றும் பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 3

ஊடகங்களால் அரசாங்கம் அமைக்கமுடியும். ஒரு அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர முடியும். ஆனால் ஊடகங்களால் அரசாங்கங்களை பாதுகாக்க முடியாது. அரசை நடத்துபவர்களால்தான் அரசை பாதுகாக்க முடியும் என்று தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ச, ஊடகங்களுடன் இணைந்து பணியாற்றுவது ஒரு கலை என்று தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களால் கூட புரிந்துகொள்ள முடியாத வகையில் இந்த நாட்டை கையாள்வதற்கு பல்வேறு சக்திகள் செயற்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெகுசன ஊடக அமைச்சில் இலங்கையில் முதல் முறையாக ஊடகவியலாளர்களுக்கு 'அசிதிசி காப்புறுதி' வழங்கும் செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வு அலரி மாளிகையில் நேற்று நடைபெற்றது. குறித்த நிகழ்வில் உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடகங்கள் அரசாங்கத்தைப் பாதுகாக்கப் போகிறது என்றால், ஊடகங்களுக்கு இதனைவிட அதிக காப்புறுதி வழங்கப்பட வேண்டும். இதனை ஊடகவியலாளர்கள் புரிந்து கொண்ட அளவுக்கு எம்மவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்று நான் நினைக்கிறேன்.

ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் காணப்பட்ட போதெல்லாம் நாங்கள் ஊடகவியலாளர்களைப் பாதுகாத்தோம். அரசியல் குண்டர்கள் தாக்கி, ஊடகவியலாளர்களின் கமராக் கருவிகளை உடைத்த போது, நாம் அவற்றை ஊடகவியலாளர்களுக்கு பெற்றுக் கொடுத்தோம்.

ஊடகங்களுடன் இணைந்து பணியாற்றுவது ஒரு கலை. ஊடகங்களுக்கு நாம் பலமாக இருந்தால் ஊடகங்கள் நம்மை பலப்படுத்தும். நாங்கள் ஒரு போதும் ஊடகங்களிடம் எதையும் மறைக்கவில்லை. ஊடகங்களிடம் இருந்து எதையாவது மறைத்தால், அதன் மீதான ஆர்வம் நாட்டு மக்களுக்கு அதிகரிக்கும். மறைக்க மறைக்க அதனூடாக உருவாகும் பொய்கள் அதிகம். ஊடகங்களால் நாம் மட்டுமல்ல, உலகமே கலக்கமடைந்துள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

---

### ஆரியகுள...

நிறைவடைந்த நிலையில் 'ஆரியகுள மகிழ்வூட்டும் திடல்' சம்பிரதாயபூர்வமாக நேற்றுமாலை திறந்து வைக்கப்பட்டது. தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் தியாகேந்திரன் வாமதேவனின் நிதிப் பங்களிப்பில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திறந்துவைக்கப்பட்டது. இதை, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் தியாகி அறக்கொடை நிதியத்தின் புதல்வர், புதல்வி, யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன், மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச சபை செயலர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மதகுருமார்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது வாமதேவன் தியாகேந்திரனின் புதல்வன் மற்றும் புதல்வியால் கல்வெட்டு திரை நீக்கம் செய்யப்பட்டதோடு விருந்தினர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு ஆரிய குளத்தை சுற்றி நாதஸ்வர இசையுடன் வாண வேடிக்கைகளோடு அழைத்து வரப்பட்டனர்.

இதன்பின்னர், குறித்த அபிவிருத்திக்கு 25 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை நிதி வழங்கிய அறக்கொடை நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பாளர் வாமதேவன் தியாகேந்திரனுக்கு மாநகர சபையால் 'அறக்கொடை அரசன்' எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதனையடுத்து மாநகர முதல்வரின் தலைமையுரை இடம்பெற்றது. பின்னர் கட்டட கலைஞர்கள், கலைஞர்களுக்குரிய விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன. இதனை தொடர்ந்து ஈழத்து நாதஸ்வர வித்துவான் ப.குமரனின் நாதஸ்வர இசைச்சங்கம் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளின்போது, ஆரியகுள திடலில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டிருந்தனர். (த-125)

### விகாராதிபதியை...

விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஆரியகுளம் நாகவிகாரை விகாராதிபதியுடன் கண்டிய நடனத்துடன் நிகழ்வுக்கு வந்தார்.

ஆரியகுளம் திறப்புவிழாவில் நாகவிகாராதிபதியின் பெயரோ கண்டிய நடன நிகழ்வு தொடர்பிலோ எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-10)

### கண்டிய...

டமை, யாழ்.ஆரியகுளம் நாகவிகாராதிபதி அழைத்துவரப்பட்டமை ஆகிய சம்பவங்களுக்கும் யாழ்.மாநகர சபைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று, முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, நிகழ்வுக்கு வரும்போது, நாகவிகாராதிபதியுடன் கண்டிய நடத்துடனேயே நிகழ்வுக்கு வந்திருந்தார்.

இது தொடர்பில் கேட்டபோதே, முதல்வர் மணிவண்ணன் மேற்கண்டவாறு தெரிவித்தார். (த-10)

## வட்டுக்கோட்டை மருத்துவமனையில் பணம் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 3

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு ஒரு இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் திருடப்பட்டுள்ளது என்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. தாதியர் அறையில் வைக்கப்பட்டிருந்த தாதியருடைய பணம் மற்றும் மருத்துவமனையின் பணம் என்பனவே இவ்வாறு திருடப்பட்டுள்ளது என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அங்கு சென்ற பொலிஸார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டதோடு, விசாரணையையும் மேற்கொண்டுள்ளனர். (த-27)


**பணிப்பெண் தேவை**

சமையல் உட்பட வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை. மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (CS 735) 1-6

தொடர்பு: 074 1472445



**45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



**அமரர் குணேஸ் தர்சியா**

தோற்றம் 11 . 08 . 1995 — மறைவு 20 . 10 . 2021

கடந்த 20.10.2021 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர். குணேஸ் தர்சியா அவர்களின் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (01.12.2021) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (03.12.2021) வெள்ளிக்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்ப குலவிளக்கின் மரணச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மற்றும் சமூக வலைத் தளங்களினூடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மடத்தடி முதலாம் ஒழுங்கை, சாவகச்சேரி.

குடும்பத்தினர் 0766099971 (கணவர்)

(CS 7211) 1-6



# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 05 10 1972



உதிர்வு 01 12 2021

எமது நிறுவனப் பணியாளர்

திரு. ந. வேணுயன் அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்

# நடராசா நந்தகுமார்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி.. ஓம் சாந்தி.. ஓம் சாந்தி...

நிர்வாகமும், பணியாளர்களும்

கரிகணன் (தனியார்) நிறுவனம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலை எகிறுவதற்கு வாய்ப்பு!



**கொழும்பு, டிசெ. 3**

**கடந்த காலத்தில் எரிபொருள் விலையில் மாற்றங்களைச் செய்யாத காரணத்தால் இறுதிப் பத்து மாதங்களில் மாத்திரம் 7 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று - வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 52 ஆண்டுகள் பழைமையானது. இதனை யாருக்கும் விற்க நாம் தீர்மானிக்கவும் இல்லை, அவ்வாறு விற்பதற்காக கேள்வி எழுமென நினைக்கவும் இல்லை. உலகின் தற்போதைய தொழில்நுட்பத்துடன் ஒப்பிடும் வேளையில், இது 52 ஆண்டுகள் பழமையான தொழில்நுட்ப முறைமையுடன் இயங்குகின்ற காரணத்தினால் இதனைக் கொண்டு நடத்துவதே கடினமாக உள்ளது. 50 நாள்களுக்கு இந்த நிலையத்தை மூடவே தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அதற்குள் மீண்டும் இயக்கத்துக்குக்கொண்டுவர முயற்சிக்கின்றோம்.

அதேபோல் எரிபொருள் விலையில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம், கடந்த காலத்தில் விலை மாற்றங்களைச் செய்யாத காரணத்தால் இறுதிப் பத்து மாதங்களில் மாத்திரம் 7 ஆயிரம் கோடிரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே ஒன்றில் விலை மாற்றம் ஏற்படவேண்டும். இல்லையேல் திறைசேரியின் மூலமாக நிவாரணம் வழங்க வேண்டும் என நிதி அமைச்சரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளோம் - என்றார். (ம)

## பஸ் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டும்!



கொழும்பு, டிசெ. 3

பஸ் கட்டணத்தை குறைந்தபட்சம் 5 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

பஸ் கட்டணத்தை குறைந்தபட்சம் 5 ரூபாவால் அதிகரிக்க வேண்டும். அதன்படி, ஆகக் குறைந்த பஸ் கட்டணம் 20 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும். இந்தக் கட்டண அதிகரிப்பை ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்குவரும் வகையில் செயற்படுத்த வேண்டும் - என்றும் அவை கோரிக்கை விடுத்துள்ளன. (ம)

## வீதிப் புனரமைப்புக்காக சிரமதானம் முன்னெடுப்பு



யாழ்ப்பாணம்,டிசெ.3

வீதிப் புனரமைப்புக்காக, சரவணை - நாரந்தனை வீதி சிரமதானம் செய்யப்பட்டது.

வடக்கு மாகாணசபையின் நிதி ஒதுக்கீடு மூலமாக, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஊடாக 2 .7 கீலோ மீற்றர் நீளமான சரவணை நாரந்தனை வீதி புனரமைக்கப்படவுள்ளது.


இதனையடுத்து வீதியின் அருகாமையில் சூழ்ந்து காணப்பட்ட பற்றைகள் அகற்றப்பட்டன.

வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் தீவகம் வடக்கு பிரதேச செயலர் ஆகியோரின் வேண்டுகோளுக்கு அமைவாக சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

சூழகம் அமைப்பின் செயலர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில், அவரது சொந்த நிதியில் தொடர்ச்சியாக 6 நாள்களாக வீதி சிரமதானம் செய்யப்பட்டது.

தீவகம் வடக்கு பிரதேச செயலர் ச.மஞ்சுளா தேவி, சூழகம் அமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினர்களான மடுத்தீன் பெனடிக்ற், கருணாகரன் குணாளன் மற்றும் சமூக ஆர்வலர்களான கிரிதரன், சுபாஸ், சகாதேவன் ஆகியோர் சிரமதானத்தை முன்னெடுத்தனர். (ஒ-4)

## மஞ்சு லலித் வர்ணகுமார எம்.பியாக பதவியேற்பு



கொழும்பு,டிசெ.3

நாடாளுமன்ற உறுப்பினராக வாத்துவகே மஞ்சு லலித் வர்ணகுமார, பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய முன்னிலையில் நேற்று முன்தினம் பதவியேற்றார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க முன்னிலையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பதிவேட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க பதவி விலகியதையடுத்து, , அவரது வெற்றிடத்துக்கு வாத்துவகே மஞ்சு லலித் வர்ணகுமார நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புளத்சிங்கள தேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளராகச் செயற்பட்ட இவர், 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் 46 ஆயிரத்து 361 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.3

வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கெற்பேலி மேற்குப் பகுதியில் இடம்பெற்றது.

இனந்தெரியாத நபர்கள் வீடு புகுந்து தாக்கியதில் குடும்பஸ்தர் காயமடைந்தார்.

கெற்பேலி மேற்கு, மிருசுவில் பகுதியைச் சேர்ந்த (வயது-39)என்பவரே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-4-159)

## சாவகச்சேரி நகரசபை பாதீடு வெற்றி

சாவகச்சேரி,டிசெ.3

சாவகச்சேரி நகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான உத்தேச பாதீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சபையின் பாதீட்டு அமர்வு நேற்று நடைபெற்றது. இதன் போது சபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் உத்தேச பாதீட்டை சபையில் சமர்ப்பித்தார்.

ஈழமக்கள் ஜனநாயக முன்னணியின் இரு உறுப்பினர்கள் தவிர்ந்த, ஏனைய அனைத்து உறுப்பினர்களும் உத்தேச பாதீட்டை ஏற்றுக் கொண்டனர். அதனால் 2022 ஆம் ஆண்டுக்கான உத்தேச பாதீடு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஒ-4-9)

## வாக்காளர் இடாப்பு திருத்தம் 30,000 ஆட்சேபனைகள் குவிவு

கொழும்பு. டிசெ. 3

2021ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு திருத்தம் தொடர்பில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆட்சேபனைகளும் உரிமை கோரல்களும் கிடைத்துள்ளன என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கிடைத்துள்ள மேன்முறையீடுகள் தற்போது பரிசீலிக்கப்படுகின்றன. மாவட்ட உதவி மற்றும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்களின் கண்காணிப்பின் கீழ் இதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு எதிர்வரும் 31ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்படவுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

## மேலும் ஒருதொகை பைஸர் இலங்கைக்கு




கொழும்பு, டிசெ. 3

கொரோனாவுக்கு எதிரான போராட்டத்துக்கு உதவும் வகையில் மேலும் ஒருதொகுதி பைஸர் தடுப்பூசிகள் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன.

32 பெட்டிகளில் ஆயிரத்து 14 கிலோ எடையுள்ள இந்த தடுப்பூசிகள் ஆரம்பத்தில் நெதர்லாந்தில் இருந்து டுபாய்க்கு அனுப்பப்பட்டன. பின்னர் அவை ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இலங்கைக்கு எடுத்துவரப்பட்டன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத் தொண்டர்களுக்கு உடனடி நியமனம் வழங்குக

## கஜேந்திரகுமார் எம்.பி. கோரிக்கை



**யாழ்ப்பாணம், டிசெ. 3**

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மகப்பேற்று விடுதி அமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். அத்துடன், போராடும் சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க, உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தினார் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.**

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'இந்த நூற்றாண்டில் நாம் எதிர்கொள்ளும் மிகவும் கடினமான சூழ்நிலையில் தம்மை அர்ப்பணித்து அளப்பரிய சேவையாற்றும் மருத்துவத்துறையைச் சார்ந்தவர்களுக்கும் சுகாதாரத் துறையைச் சார்ந்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளையும் மரியாதைகளையும் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

குறிப்பாக போரால் பாதிக்கப்பட்டு, குறைந்த வசதிகளுக்கு மத்தியிலும் மிகச்சிறப்பான பணியை மேற்கொண்டுவரும் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் அனைத்து சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் துறைசார்ந்த அனைவரையும் தலைவணங்குகின்றேன்.

வடக்கு மாகாணத்துக்கு மட்டுமல்லாது, வடக்கு மாகாணத்துக்கு வெளியே வசிக்கும் மக்களுக்கும் மிகமுக்கியமான உயர்நிலை மருத்துவமனையாக விளங்கும் யாழ். போதனா மருத்துவமனையின் உட்கட்டமைப்புவசதிகள் மற்றும் அங்கு நிலவுகின்ற குறைபாடுகள் உடனடியாக கருத்திலெடுக்கப்பட்டு ஆவன செய்யப்படவேண்டியது அவசியமானதாகும். முக்கியமாக, யாழ்.போதனா மருத்துவமனையில் மகப்பேற்று விடுதிக்கென உரிய நிரந்தர கட்டடம் இன்னமும் இல்லை என்பது மிகவும் கவலைக்குரிய மிக முக்கியமான விடயமாகும்.

மிகப் பழமையான பழுதடைந்த நிலையில் இருந்த யாழ். போதனா மருத்துவமனையின் மகப்பேற்று விடுதியானது 2013ஆம் ஆண்டில் இடிக்கப்பட்டிருந்தது. அந்த மகப்பேற்று விடுதி இன்னமும் கட்டப்படாது, உரிய மகப்பேற்று விடுதி வசதியின்றியே தற்காலிக விடுதி வசதியுடன் யாழ்.போதனா மருத்துவமனை இன்னமும் இயங்கிவருகிறது.

அடுத்து, தாதிய உத்தியோகத்ததர்கள் குறித்து எனது கரிசனையை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். மருத்துவநிபுணர்கள், மருத்துவர்கள் போலவே, தாதிய உத்தியோகத்தர்களுடைய பணியும் மிக முக்கியமானது.

யாழ்.போதனா மருத்துவமனையில் தாதிய உத்தியோகத்தர்களுக்கான அனுமதியளிக்கப்பட்ட ஆளணி 657ஆகும். ஆனால் இந்த ஆளணியில் 573 பேர் மட்டுமே உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இந்த 573 தாதிய உத்தியோகத்தர்களுள், எந்தவொரு காலப்பகுதியினை எடுத்தாலும் இயல்பாகவே ஏறத்தாழ 50 பேர் வரை பணி விடுப்பில் இருப்பார்கள். 78 பேர் வரையான தாதிய உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்று இடமாறுதலுக்காக காத்திருக்கிறவர்களாக இருக்கிறார்கள்.

இவற்றைத் தவிர்த்துப் பார்த்தால் கூட, ஆளணி மீள் மதிப்பீடு செய்யப்படாது, மிகப் பழைய குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த ஆளணியை எடுத்துக்கொண்டால் கூட யாழ்.போதனா மருத்துவமனையில் இன்னமும் 134 தாதிய உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம், உடனடியாக நிரப்பப்படவேண்டிய நிலையில் இருக்கிறது.

இன்றைய சூழலில், வடக்கு மாகாண சுகாதாரத்துறையில் சுகாதார சிற்றூழியர்களுக்கு ஏறத்தாழ 73 வீதம் பற்றாக்குறை நிலவுகிறது. ஆனால் வடக்கு மாகாண சுகாதர துறையில், கடந்த போர்க் காலத்தில் ஏறத்தாழ 900 சுகாதார தொண்டர்கள் அளப்பெரும் பணியாற்றி இருந்தார்கள். ஆனால் அவர்கள் எவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படாது வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இப்படியாக சுகாதாரத்துறை சிற்றூழியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்ற இந்தக் காலப்பகுதியில் ஒதுக்கிவைக்கப்பட்ட அந்த 900 சுகாதார சேவை தொண்டர்களை இலகுவாக உள்ளீர்க்கமுடியும். அவர்களுக்கான கல்வித்தகமைகள் என எந்தவொரு தடைகளும் இல்லாதநிலையில் அவர்களை இலகுவாக உள்ளீர்க்க முடியும்-என்றார். (ம)

# தரமற்ற பாலம் மீண்டும் சீரமைப்பு

மன்னார்,டிசெ.3

மன்னார் - மடுக்கரை வீதியில் தரமற்ற முறையில் அமைக்கப்பட்டிருந்த பாலம் மீண்டும் மறுசீரமைக்கப்படும் என்று வீதி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தரமற்ற முறையில் அமைக்கப்பட்டிருந்த பாலத்தால் கிண்ணியாவில் இடம்பெற்ற விபத்துப்போல் இன்னொரு சம்பவம் நடைபெறும் என்று ஊடகங்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

இதனையடுத்து வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வடக்கு மாகாண திட்டப்பணிப்பாளர் மற்றும் நானாட்டான் பிரதேச செயலர் அடங்கிய குழுவினர் நேரடியாகச் சென்று பாலத்தை ஆராய்ந்தனர்.

இதன்போது குறித்தபாலம் தரமற்ற முறையில் அமைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்தனர்.

எனினும் தற்போது மழைக்காலமாக இருப்பதால் தற்காலிகமாக போக்குவரத்துக்கு ஏதுவாக பாலத்தை சீரமைத்து, அடுத்த வருடம் பாலத்தை உரிய முறையில் தரமாக சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் திட்டப் பணிப்பாளர் உறுதியளித்தார். அதேவேளை நானாட்டான் பிரதேசத்தில் அவசரமாக அமைக்கப்பட வேண்டிய சில பாலங்கள், இதன்போது நானாட்டான் பிரதேச செயலாளரால் திட்டப்பணிப்பாளருக்குக் காண்பிக்கப்பட்டன. (ஒ-4-213)



# வெள்ளத்தில் தத்தளிக்கும் சுதந்திரபுரம் கொலனி

## வெளியேற முடியாது மக்கள் அவதி

முல்லைத்தீவு, டிசெ.3

தொடர் மழையால், புதுக்குடியிருப்பு - சுதந்திரபுரம் கொலனி கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. மக்கள் வீடுகளைவிட்டு வெளியேற முடியாத நிலையில் முடங்கியுள்ளனர்.

சுதந்திரபுரம் கொலனி மத்தி கிராமத்தில் 75 வரையான குடும்பங்களும், கொலனி கிழக்குப் பகுதியில் 25 வரையான குடும்பங்களும், கொலனி தெற்குப் பகுதியில் 15 வரையான குடும்பங்களும் இவ்வாறு பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

சுதந்திரபுரம் கிராமத்தின் முதன்மைவீதி, சரியாக செப்பனிடப்பட்டும், 40 ஏக்கர் பகுதி ஊடாக செல்லும் கொலனி மத்திப் பகுதியில் குறிப்பிட்ட அளவு வீதி செப்பனிடப்படவில்லை. இதனால் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இந்தப் பகுதியில் தற்காலிக வீட்டில் வசித்து வரும் குடும்பம் ஒன்றின் வீடு வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. மேட்டு நிலப் பயிர்செய்கை, நெற்பயிர்ச் செய்கை மற்றும் நாளாந்த கூலித்தொழிலைச் செய்துவரும் மக்களுக்கான பிரதான வீதி புனரமைக்கப்படவில்லை. இதனால் குறிப்பாக மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

ஆண்டு தோறும் பெய்து வரும் பருவப் பெயர்ச்சி மழையின்போது எங்களது கிராமம் தனித்து விடப்படுகின்றது.

அரச அதிகாரிகளோ அல்லதுநிறுவனங்களோ எங்களை வந்து பார்ப்பதில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். ஏனைய மக்களைப் போன்று சுதந்திரபுரம் கொலனி மக்களும் கிராமத்தில் இருந்து நகரத்தை நோக்கிப் பயணிப்பதற்கான வீதிகளைச் சீரமைக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-19)

# கொடிகாமம் மத்தியில் வெள்ளம் வெளியேற்றம்



கொடிகாமம் மத்தி தண்டவாளக் கரையோரப் பகுதியில் தேங்கி நிற்கும் வெள்ளம், கெற்பேலி கஜபாகு இராணுவப் பிரிவினரால் வெளியேற்றப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி தண்டவாளக் கரையோரப் பகுதியில் வாழும் குடும்பங்கள் இடுப்பளவு வெள்ளத்தில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் இருந்தன.

மாணவர்கள் ஈர உடையுடன் பாடசாலைக்குச் சென்று, கல்வி கற்க வேண்டிய அவல நிலைக்கும் தள்ளப்பட்டனர்.

இதனையடுத்து இராணுவத்தினர் வெள்ளம் வடிந்தோடத் தடையாக இருந்த பகுதிகளைத் துப்புரவு செய்து, வாய்க்கால் ஊடாக வெள்ளம் வடிந்தோடக்கூடிய நடவடிக்கையை மேற்கொண்டனர். (ஒ-4-159)

# வெள்ளத்தில் மூழ்கியது 25 வீட்டுத்திட்ட கிராமம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

புங்குடுதீவு 25 வீட்டுத் திட்டக் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மக்களின் நாளாந்த போக்குவரத்தும் தடைப் பட்டுள்ளது.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவு முதலாம் வட்டாரம், ஜே/28 கிராம அலுவலர் பிரிவில் உள்ள 25 வீட்டுத்திட்டக் கிராமத்தில் வசிக்கும் 25 குடும்பங்கள், தொடரும் மழையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் வீடுகளுக்குச் செல்லும் வீதியும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், போக்குவரத்தும் தடைப் பட்டுள்ளது. (ஒ-4-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விற்கலாம், கடத்தலாம் வெட்டலாம், கொத்தலாம்

'ஏற்றுமதிமூலம் இலங்கைக்கு அதிக வருவாயை பெற்றுக்கொடுக்கும் பயிர் என்ன?'

1. தேயிலை
2. இறப்பர்
3. கஞ்சா
4. தெங்கு

2025ஆம் ஆண்டு இடம்பெறும் பரீட்சை வினாத்தாள்களில் இப்படியொரு கேள்வி இடம்பிடித்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமே இருக்காது. அப்படிப்பட்ட நிலையில்தான் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றது நாடு.

மருத்துவத் தேவைகளுக்காக கஞ்சா ஏற்றுமதியை சட்டபூர்வமாக்க நடவடிக்கை எடுப்பதற்கும், கஞ்சா ஏற்றுமதித்துறையை வலுப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தார் சுதேச மருத்துவத்துறை இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி. நாடாளுமன்ற உறுப்பினரான டயானா கமகே, இந்தத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் ஏற்கனவே தெரிவித்துவிட்டார். நாட்டின் கடனை அடைப்பதற்கு கஞ்சா பயிரிடுவதன் மூலம் தீர்வைப் பெறலாம் என்பது அவருடைய கருத்தாக இருந்தது. இதற்கு ஊடகங்கள் வாயிலாகவும் சமூக வலைத்தளங்கள் வாயிலாகவும் பலரும் கண்டனம் தெரிவித்தனர். டயானாவின் கருத்து கேலிகளுக்கும் கெச்சிதங்களுக்கும் உரித்தானதாக மாறியிருந்தது. அதெல்லாம் இங்கு சாத்தியமேயில்லை என்று கருதப்பட்ட நிலையில், கமகேயின் கோரிக்கை தற்போது செயல்வடிவம் பெற்றுள்ளது.

ஒரு நாடு நாசமாய் போவதற்கு என்னென்ன வழிமுறைகள் உள்ளனவோ அதையெல்லாம் கடைந்தெடுத்து, அதன்படி இலங்கை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றதா? என்ற கேள்வி தற்போதெல்லாம் அடிக்கடி எழுகின்றது.

கஞ்சாவை உலகில் சட்டபூர்வமாக அங்கீகரித்த நாடாக தென்னமெரிக்கக் கண்டத்தின் உருகுவே உள்ளது. தென்னமெரிக்க நாடுகளான கொலம்பியா, பிரேஸில், ஆர்ஜென்ரீனா, உருகுவே, மெக்ஸிக்கோ ஆகிய நாடுகள் போதைக் கலாசாரத்துக்கு இலக்கணமாகக் கொடிகட்டிப் பறக்கின்றன. அதிலும் உருகுவேயில் கஞ்சாப் பாவனை அதியுச்சம். கடந்த 30 ஆண்டுகளில் 300 மடங்கு அங்கு கஞ்சாப் புழக்கம் அதிகரித்துள்ளது. எனவே இதைத் தடுப்பதற்கு உருகுவே அரசு பல்வேறு திட்டங்களைப் பரிசீலித்தது. எமக்கு டயானா கமகே போன்று உருகுவேயிலும் யாரோ ஒரு ''ஐடியா மணி'' இருந்திருக்க வேண்டும். 11 மணிநேர நாடாளுமன்ற விவாதத்துக்குப்பின்னர், கஞ்சாவுக்கு அனுமதி வழங்கியது உருகுவே.

உருகுவேயில் தற்போதைய நிலவரத்தின்படி, 18 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் அரச மருந்தகங்களில் மாதத்துக்கு 40 கிராம் கஞ்சாவை வாங்கிக் கொள்ளலாம். ஒவ்வொரு குடிமகனும் தனது வீட்டில் 6 கஞ்சாச் செடிகளை வளர்க்கலாம். 15 முதல் 45 பேர் இணைந்து தனிச் சங்கம் தொடங்கி, ஆண்டுக்கு 99 கஞ்சாச் செடிகள்வரை வளர்க்கலாம். இங்கே கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், இலங்கையைப் போன்றே ''மருத்துவத் தேவை'' என்ற பிம்பமே கஞ்சாவுக்குச் சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கான முதல்படியாக உருகுவேயிலும் இருந்தது.

இந்த விடயம் இத்துடன் முடிந்துவிடப் போகின்றதா யார் கண்டது?. வாள்வெட்டுக் கலாசாரமும் நாட்டில் மிகுந்துள்ளது. இனி இதைத் தடுப்பதற்கு நாடாளுமன்றத்தில் ''கடும்'' விவாதங்கள் நடத்தி, வாள்வெட்டுக் குழுக்கள் தம்மைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும், உயிராபத்து ஏற்படாத வகையில், மாதம் பத்துப்பேரை வெட்டிக்கொள்ளலாம் என்று இந்த அரசாங்கம் உத்தரவு போட்டாலும் போடக்கூடும்.

சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின், குறித்த சட்டவிரோதச் செயல்களுக்கு சட்ட அங்கீகாரத்தைக் கொடுத்துவிட்டால், பிரச்சினை முடிந் [illegible] தது என்பது ஆசிய ஆச்சரியங்களின் மனநிலையோ என்னவோ...!.



# எரிவாயு சிலிண்டர் விற்பனையில் சரிவு

கொழும்பு, டிசெ.3



**எரிவாயு சிலிண்டர்களுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்கள் நாடளாவிய ரீதியில் அதிகரித்துள்ளநிலையில், எரிவாயு சிலிண்டர் விற்பனை குறைந்துள்ளது என்று வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.**

சில நாள்களுக்குமுன்னர், எரிவாயு சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு நிலவிய நிலையில், தற்போது நுகர்வோர் எரிவாயு சிலிண்டர் கொள்வனவைத் தவிர்க்கின்றனர் என்றும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

தற்போது காஸ் நிரப்பப்பட்ட சிலிண்டர்கள் விற்பனை செய்யப்படாது தேங்கியுள்ளன என்று தெரிவித்துள்ள வர்த்தகர்கள், எரிவாயுக் கசிவு காரணமாக வாடிக்கையாளர்களால் திருப்பித் தரப்படும் ஏரிவாயு சிலிண்டர்களை நிறுவனத்துக்குத் திருப்பி அனுப்புவதில் சிக்கல்கள் காணப்படுகின்றன என்றும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அறிவிக்கப்பட்டபோதும், லிட்ரோ எரிவாயு நிறுவனப் பணியாளர்கள், எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெறுவதற்காக வரவில்லை என்றும், அதனால் எரிவாயு சிலிண்டர்களை வர்த்தக நிலையங்களுக்கு வெளியே சேமிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ள என்றும் - வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# கோரிக்கைகள் புறக்கணிப்பு: மின்சாரசபை போர்க்கொடி!

கொழும்பு, டிசெ. 3

தமது ஆறு அம்சக்கோரிக்கைகள் செவிசாய்க்கப்படாத காரணத்தால், இனிவரும் காலங்களில் கடமை நேரத்துக்கு மேலதிகமாக பணியில் ஈடுபடப்போவதில்லை என்று இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

"யுகதனவி" மின்நிலையத்தின் 40 சதவீதப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் தீர்மானத்தைக் கைவிடல், மின்சார சபையின் நிர்வாகக் கட்டமைப்பை 8 கட்டமாக வேறுபடுத்தலைத் தவிர்த்தல் உள்ளிட்ட 6 பிரதான கோரிக்கைகள் எம்மால் அரசிடம் முன்வைக்கப்பட்டன. ஆனால், அரசு அந்தக் கோரிக்கைகளைப் பரிசீலிக்கவில்லை. எனவே, இனிவரும் நாள்களில் வரையறுக்கப்பட்ட அளவில் கடமையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

அவசர நிலைமைகள் மற்றும் மின்துண்டிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில் வரையறுக்கப்பட்ட கடமை நேரத்துக்கு மேலதிகமாக சேவையில் ஈடுபடப் போவதில்லை. இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் - என்றார். (ம)

# கறுக்காய்க் குளம் கதவு திருட்டு விரைவில் நீர்த் தட்டுப்பாடு

கிளிநொச்சி,டிசெ.3

புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட புன்னைநீராவிப் பகுதியில் அமைந்துள்ள கறுக்காய்க் குளத்தின் நீர் திறக்கப்படும் இரும்புக் கதவு திருடப்பட்டுள்ளது.

இதனால் குளத்தில் சேமிக்கப்படும் நீர் வெளியேற்றப்பட்டு, எதிர்காலத்தில் நீர்ப்பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்தக் குளத்தில் நீரைச் சேமித்துவைப்பதன் மூலம் சுமார் 150 குடும்பங்கள் பயனடைந்து வருகின்றனர். அத்துடன் 50 ஏக்கர் வயல் செய்கையும், 120 ஏக்கர் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றன.

விரைவில் கதவு பொருத்தப்படாவிட்டால் முற்று முழுதாக குளத்திலி ருந்து நீர் வெளியேறிவிடும் நிலை ஏற்படும். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்று வடக்கில் அதிகரிப்பு!

**யாழ்ப்பாணம், டிசெ. 3**


**வடக்கு மாகாணத்தில் ஒக்ரோபர் மாதத்தைவிட நவம்பர் மாதத்தில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது - என்று வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.**




வடக்கு மாகாணத்தில் ஒக்ரோபர் மாதத்தில் 2 ஆயிரத்து 661 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். நவம்பர் மாதம் இந்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 49ஆக அதிகரித்துள்ளது. அதேநேரம் ஒக்ரோபர் மாதம் 71 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ள நிலையில், நவம்பர் மாதத்தில் இந்த எண்ணிக்கை 49ஆகக் குறைந்துள்ளது. (ம)

## வடமாகாணத்தில் நவம்பரில் கிளிநொச்சியிலேயே அதிகளவான தொற்று

யாழ்ப்பாணம், டிசெ. 3



வடமாகாணத்தைப் பொறுத்தவரை நவம்பர் மாதத்தில் கிளிநொச்சியிலேயே அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் - என்று வடமாகாண சுகாதாரத் திணைக்களப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி கிளிநொச்சி மாவட்டத்தில் 842 பேர் கடந்த மாதம் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அடுத்தபடியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 842 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் முறையே 713, 540, 129 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம)


## விபத்துக்களில் இருவர் இறப்பு

கொழும்பு, டிசெ. 3

இருவேறு இடங்களில் இடம்பெற்ற இரு விபத்துக்களில் பெண்கள் இருவர் மரணமடைந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு, நிக்கலஸ் மாகஸ் மாவத்தை, தலாதுவ சந்திக்கு அருகில் வாகனமொன்று பாதசாரியான பெண்ணொருவரை மோதியதில் அவர் உயிரிழந்தார். நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதான பெண்ணே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை - குருநாகல் - கொழும்பு வீதி, கொழும்பிலிருந்து - குருநாகல் நோக்கிப் பயணித்த தனியார்பஸ், பாதசாரியானபெண்ணொருவர்மீது மோதியதில் பெண் உயிரிழந்தார். கடதுன்ன பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதான பெண்ணே உயிரிழந்துள்ளார். (ம-22)



## அவுஸ்திரேலியத் தூதுவர் கிளிநொச்சி வருகை

கிளிநொச்சி, டிசெ.3

இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவர் டேவிட் ஹொலி கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் வருகை தந்தார்.

பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முழங்காவில் இரணைமாதாநகரில் உள்ள கடல் உணவுகள் பதனிடும் நிலையத்தை அவர் பார்வையிட்டார்.

நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்பாக தூதுவர், இரணைமாதாநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்தார். (ஒ- 4-214)

## அரசை விரட்டியடிக்க ஓரணியில் திரளுங்கள்

*சஜித் மீண்டும் அழைப்பு*

கொழும்பு, டிசெ. 3



"நாட்டு மக்கள் அனைவரையும் பிச்சைக்காரர்களாக மாற்றுவதற்கு முயலும் இந்த அரசை வீட்டுக்கு விரட்டியடிக்க சகலரும் ஓரணியில் திரள வேண்டும்" இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

'கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்த நாள் தொடக்கம், நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், கொரோனாவைக் காரணம் காட்டி, இந்த அரசு தப்பிப்பிழைக்க முயல்கின்றது. எரிவாயு சிலிண்டர் வெடிப்பு பிரச்சினைக்கும் கொரோனாத் தொற்றுக்கும் என்ன தொடர்பு உண்டு?

மக்களை மடையர்களாக்கி ஆட்சியை முன்னகர்த்தலாம் என்று ராஜபக்சக்கள் கனவு காண்கின்றனர். இதற்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் ஏமாற்றிப் பிழைக்கும் இந்த அரசுக்குத் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும். இந்த அரசை வீட்டுக்கு விரட்டியடிக்க சகலரும் ஓரணியில் திரள வேண்டும். இல்லையேல் இந்த ஆட்சியில் மக்கள் அனைவரும் பிச்சைக்காரர்களாக மாறும் நிலைமை ஏற்படும், வறுமையின் பிடியில் சிக்கி பரிதவிக்கும் நிலைமை உண்டாகும் - என்றார். (ம-22)



## நத்தார் பண்டிகை: முத்திரை வெளியீடு

கொழும்பு, டிசெ.3

நத்தார்தின நினைவு முத்திரை மற்றும் முதல்நாள் உறை, பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்னவால் நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறை வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து டலஸ் அழகப்பெருமவால் நினைவுமுத்திரை மற்றும் முதல் நாள் உறை பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டது.

முத்திரை வடிவமைப்புப் போட்டியில் வெற்றிபெற்ற கந்தானை புனித செபஸ்தியன் மகா வித்தியாலயத்தின் மாணவன் நிமேஷ் சமத் பெரேரா மற்றும் நுகேகொட அனுலா வித்தியாலயத்தின் மாணவி ஷினாலி ருவண்யா பீரிஸ் ஆகியோரின் சித்திரங்களைக் கொண்டு, முத்திரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் புனித செபஸ்தியன் மகா வித்தியாலய மாணவனால் வரையப்பட்ட பிரதமரின் உருவப்படமும் வழங்கப்பட்டது. (ஓ-4)

## வவுனியாவிலிருந்து புதிய பஸ் சேவை

வவுனியா, டிசெ.3

இலங்கைப் போக்குவரத்துச்சபையின் வவுனியா சாலையில் புதிய பேருந்து சேவை ஒன்று இன்று முதல் ஆரம்பிக்கப்படுகிறது.

வவுனியா புதிய பஸ் நிலையத்தில்இருந்து முற்பகல் 10.30 மணிக்கு புறப்படும் பஸ், மன்னார் நோக்கிப் பயணித்து பின், மன்னாரிலிருந்து பிற்பகல் 1.30 மணிக்கு திருகோணமலை நோக்கிப் புறப்படும்.

மீண்டும் மறுநாள் காலை 5.45 மணிக்கு திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டு, மீண்டும் பிற்பகல் 1.45 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி சேவையை வழங்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-110)

## வவுனியாவிலும் வெடித்தது எரிவாயு அடுப்பு

வவுனியா, டிசெ.3

வவுனியாவில் எரிவாயு அடுப்பு ஒன்று நேற்றுமுன்தினம் வெடித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வெடிப்புச் சம்பவம் வவுனியா, வேரகம அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டத்திலேயே நடந்துள்ளது.

வீட்டில் [illegible] சமையல் செய்தபின்னர், எரிவாயு அடுப்பை நிறுத்தி வைத்துச் சென்றபின்னர், அடுப்புத் திடீரென வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ச் சமூகத்தின்

# மாறாத சிந்தனையும் மாற்றுத்திறனாளிகளும்

■ என்.செல்வராஜா



சம வாய்ப்பு என்பது வழக்கொழிந்துபோய் சமத்துவமும் பன்மைத்துவமும் என்பதே வளர்ச்சி கண்ட சமூகங்களின் தாராகமந்திரமாக மாறியுள்ள இந்தக் காலகட்டத்திலும் இலங்கையில், குறிப்பாக தமிழ் சமூகத்தின் மத்தியில் இவைபற்றிய விழிப்புணர்வு போதுமானதாக இல்லை.

பல்வேறு வகைப்பட்ட கலாசார, சமூக, பொருளாதாரப் பின்னணிகளில் இருந்து வருவோருக்கு வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அனைவருக்கும் சம வாய்ப்பு என்ற அடிப்படையில் திட்டங்கள் வகுக்கப்படுமானால் அந்த நாடுகளில் அந்த வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றல் உள்ளவர்களால் மட்டுமே அவற்றைப்பெற்றுக்கொள்ளமுடியும். அதற்கான ஆற்றல் இல்லாதவர்களுக்கு சமவாய்ப்பு என்பதற்கு எந்தவித அர்த்தமும் கிடையாது. இந்தப் பின்னணியிலேயே சமவாய்ப்பு என்பது காலாவதியாகி சமத்துவமும் பன்மைத்துவமும் சமூக முன்னேற்றத்துக்கான அடிப்படைகளாக மாறின.

மற்றவர்களைப் பாகுபாட்டோடு நடத்துகின்றபோக்கு தமிழ்ச் சமூகத்தில் ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட்ட போக்காகவே இருந்து வந்துள்ளது. வயது, பால், சாதி, மதம், பிரதேசம், தொழில், பொருளாதாரச் சூழல் என்று பல்வேறு காரணிகளின் அடிப்படையில் மக்கள் வெவ்வேறு வகையான பாகுபாடுகளை அனுபவிக்கின்றனர். இந்தப் பாகுபாடுகளோடு கூடவே உடலியல் குறைபாடுகள் மூளை வளர்ச்சிக்குறைவும் சேர்கின்றபோது, பாதிக்கப்பட்டவர்களை மிக அசாதாரண சூழலுக்குள் தள்ளுகின்றது. குறிப்பாக வளர்ச்சி அடைந்த நாடுகளில், இவ்வாறான பாகுபாடுகளை கையாள்வதற்கான உள்ளுணர்வைச் சமூகமும், சட்டப் பாதுகாப்பை அரசும் ஓரளவுக்கு ஏற்பாடு செய்து வழங்கியுள்ளன.

### ஊனமுற்றவர்களுக்கு சமூகத்தில் பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும்

குறிப்பாக பிரித்தானியாவை எடுத்துக் கொண்டால் உள்ளுணர்வு, பொதுப் புத்தியைக்கடந்து அரசு விளிம்புநிலை மக்களுக்கான சட்டப்பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. 160 சட்டநியமங்களை ஒன்றாக்கி, அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்து சமத்துவத்தை நடைமுறைச் சாத்தியமாக்குவது இலகுவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக யார் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் இந்தச் சட்டம் வரையறுத்துள்ளது. அதன்படி பின்வரும் 8 வகை இயல்புடையோரும் சட்டப் பாதுகாப்பை பெற்றுள்ளனர்: வயது, உடல் ஊனம், பால் மீள்தேர்வு, திருமணமும் சேர்ந்து வாழதலும், தாய்மையும் மகப்பேறும், இனம், சமயம், பால் இவ்வளவு சட்டப் பாதுகாப்பும் இருந்த போதும்கூட, ஊனமுற்றவர்கள் நாளாந்தம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தே வருகின்றனர். அப்படி இருக்கையில் இலங்கைபோன்ற நாடுகளில், குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் ஊனமுற்றவர்களின் வாழ்க்கை என்பது எமது கற்பனைக்கும் எட்டாத துன்பகரமானது என்றால் மிகையல்ல.

இன்றும் தமிழ் சினிமாவில் ஊனமுற்றவர்களை கிண்டலடிப்பதும் அவர்களின் ஊனத்தை எள்ளி நகையாடுவதும் ஒரு வகை நகைச்சுவையாகவே பெரும்பாலானவர்களால் ரசிக்கப்படுகின்றது. இவ்வாறான நடைமுறைகளைக் கண்டிக்கின்ற, எதிர்க்கின்ற இயல்புகள் குறிப்பிடத்தக்க அளவில் எம்மிடையே வெளிப்படுத்தப்படவில்லை. இவர்கள் பாதிக்கப்பட்டவர்களுடைய நிலையில் இருந்து அதனைப் பார்க்கத் தவறிவிடுகின்றனர். சமூகத்தில் பெரும்பான்மையோடு ஒத்தோடுகின்ற போக்கே இன்னமும் பொதுவிதியாக உள்ளது. இதனால் தமிழ்ச் சமூகத்தில் பாகுபாடும் துவேசமும் மிகப்பொதுவானதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான ஓர் அம்சமாகவே இன்னமும் உள்ளது. உரிமை என்பதனை தமக்கானது மட்டுமே எனப் பலரும் புரிந்துவைத்துள்ளனர். அந்த உரிமை மற்றவர்களுக்கும் இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளத் தவறுகின்றனர்.

2012ஆம் ஆண்டில் இலங்கையில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சனத்தொகையைக் கணக்கெடுப்பின்படி ஆறு வகையான செயற்பாட்டு குறைபாடுகள் இனம் காணப்பட்டுள்ளன. பார்வை, கேட்டல், இயக்கம், மூளைத்திறன், நாளாந்த செயற்பாடு, தொடர்பாடல் ஆகிய குறைபாடுகள். இலங்கையில் 16 லட்சத்துக்கு சற்று அதிகமானவர்களுக்கு இவ்வாறான குறைபாடுகள் உள்ளன. இவர்களில் பெரும்பான்மையானவர்கள் பார்வைக் குறைபாடுகளுடனும் நடந்து இயங்க முடியாதவர்களாகவும் உள்ளனர். இந்தக் குறைபாடுகள் பெண்களில் கணிசமான அளவு அதிகமாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு ஆயிரம் பேரில் 87 பேர் குறைபாடுடையவர்களாக உள்ளனர். 57 வீதமான பெண்களும் 43 வீதமான ஆண்களும் குறைபாடுடையவர்களாக உள்ளனர். குறைபாடுகளுடன் வாழ்வது என்பதே மிகக் கடினமானதாக இருக்கின்ற போது, அவ்வாறு பாதிக்கப்பட்டவர் பெண்ணாகவும் இருக்கின்றபோது, அதன் பாதிப்பு அதீதமாக இருக்கும். மேலும் வயதோடு இந்தக் குறைபாடுகளின் எண்ணிக்கையும் வீதாசாரமும் அதிகரித்துச் செல்கின்றது. வயோதிபர்களிடையேயே குறைபாடுகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது.

> **இலங்கையிலும் ஊனமுற்றவர்களை பாதுகாப்பதற்கான சட்டதிட்டங்கள் சில இருந்தபோதும் சில அடிப்படைப் பொருளாதாரப் பாதுகாப்புகள் செய்யப்பட்டு இருந்தாலும் அவை பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மை.**

### தங்கி வாழும் நிலை

குறைபாடுகளுடன் உள்ள 16 இலட்சம் பேரில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். மற்றைய மூன்றில் இரண்டு பகுதியினர் தங்கி வாழ வேண்டிய நிலையிலேயே உள்ளனர். வெளிநாடுகளில் உள்ள பொருளாதார, சட்டப் பாதுகாப்புகள் இலங்கையில் கிடையாத நிலையில், அங்குள்ள குடும்ப உறுப்பினர்களில் தங்கி வாழ்வதென்பது குடும்ப உறுப்பினர்களுக்கு சுமையாகவும் அதன் காரணமான நெருக்கடிகளுக்கும் ஏச்சுக்களுக்கும் பேச்சுக்களுக்கும் இவர்கள் முகம்கொடுக்க வேண்டியுமிருக்கின்றது. இந்த மூன்றில் இரண்டு பகுதியினரில் அரைவாசிப்பேர் வருமானம் இல்லாத வீட்டுவேலைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் அதேவேளை, மற்றைய பகுதியினர் வயோதிபம் காரணமாக வேலை செய்ய முடியாதவர்களாக உள்ளனர். குறைபாடுகளுடைய 16 லட்சம் பேரில் 96 வீதமானவர்கள் எந்தவிதமான கல்விச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருக்கவில்லை. வெறும் 3.4 வீதமானவர்கள் 55 ஆயிரம் பேர் வரையானவர்கள் மட்டுமே பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொண்டிருந்தனர்.

0.1 வீதமான இரண்டாயிரத்துக்கும் சற்றுக்கூடியவர்கள் மட்டுமே பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தனர். குறைபாடுடையவர்களின் கல்வித் தரம் என்று பார்க்கின்றபோது முன்பள்ளி (35 வீதம்), இடைநிலைப்பள்ளி (34 வீதம்), கா.பொ.த. சாதாரண தரம் (11 வீதம்), க. பொ.த. உயர்தரம் (5.2 விதம்), பட்டப்படிப்பு (1.3 வீதம்) என்று எடுத்துக்கொண்டால் அவர்களுடைய கல்விமட்டம் கீழ்நிலையிலே இருப்பதை அவதானிக்கலாம். குறைபாடுடையவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வருமானத்தை ஈட்டித்தராத வீட்டு வேலைகளுக்குள் தங்களை முடக்குவதற்கு அவர்கள் போதிய கல்வியூட்டப்படாமை முக்கிய காரணமாக இருக்கலாம்.

### ஊனமுற்றவர்களுக்காக பல்வேறு அமைப்புக்கள் உருவாகவேண்டும்

இலங்கையில், 1981ஆம் ஆண்டில் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை ஐந்தரை லட்சமாக இருந்த, 1992ஆம் ஆண்டில் ஏழு லட்சமாக உயர்ந்து, 2012ஆம் ஆண்டில் 16 லட்சமாக உயர்ந்தது. நாட்டில் இடம்பெற்ற மூப்பது ஆண்டுகால உள்நாட்டு போர் இந்த ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது. மேலும் போசாக்குக் குறைபாடு, வீதி விபத்துக்களும் தற்போது குறைபாடுகளை ஏற்படுத்துவதில் முக்கிய காரணிகளாக உள்ளன.

இலங்கையிலும் ஊனமுற்றவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டதிட்டங்கள் சில இருந்த போதும் சில அடிப்படைப் பொருளாதாரப் பாதுகாப்புக்கள் செய்யப்பட்டு இருந்தாலும் அவை பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மை.

மேலும் இத்திட்டங்களை அறிந்துகொள்வதற்கான ஆற்றலோ கல்வித் திறனோ பாதிக்கப்பட்டவர்களிடம் இல்லை. இதனைப் பாதிக்கப்பட்டவர்களிடம் கொண்டு செல்வதற்கான செயற்றிட்டங்களும் பெயரளவில் இருந்தாலும்கூட அவை நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் பின்னணியில் ஊனமுற்றவர்களின் குறைபாடுடையவர்களின் நிலை இலங்கை போன்ற நாடுகளில் எவ்வாறு இருக்கும் என்பதை கற்பனை செய்து பார்க்கமுடியும். ஊனமுற்றவர்கள், குறைபாடுடையவர்கள் (மாற்றுத்திறனாளிகள்) சார்பில் சமூக மட்டத்தில் சில அமைப்புகள் உருவாகி செயற்பட்டு வந்தாலும் அங்குள்ளதேவைகளோடு ஒப்பிடுகின்ற போது இவை வறண்ட நிலத்தில் விழுகின்ற மழைத்துளி போன்றதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.

## கேள்வி அறிவித்தல்

### சபை நிதி - 2021

1. சபையின் நிதி ஒதுக்கீட்டில் ஒரு வேலைத்திட்டத்திற்கும் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு **பிரதேசசபை** கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உரிய தரத்தில் பொருத்தமான கேள்விகள் கிடைக்காத பட்ஷத்தில் மாத்திரம் எம்மால் கோரப்பட்ட மற்றய தர கேள்விகள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
4. வடமாகாண வழங்குனர் சேவையில் நடப்பாண்டில் பதிவு செய்தவராக இருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு **புதுக்குடியிருப்பு (தொலைபேசி: 0212290847, 0212291023** e.mail – pkipsmullai@gmail.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணி வரை 16.12.2021 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 03.12.2021ம் திகதியிலிருந்து 16.12.2021**ம் திகதி** வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **2000.00 (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், **பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** எனும் முகவரிக்கு 17.12.2021ம் திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்திமூன்று – 18.02.2022) நாட்கள் வரை செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (கட்டடம்) | வேண்டப்படும் கேள்விப் பிணை | | நிதிமூலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் | |
| NP/14/44(04)/ Cou/Cap/10/22 /2021 | Purchasing of Street Light | 1.328 | 30 நாட்கள் | வடமாகாணத்தில் பதிவு செய்யப் பட்டவர்கள் | 15,000.00 | 18.02.2022 | சபை நிதி - 2021 |

11) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

தலைவர்,
பிரதேசசபை பெறுகைக்குழு
புதுக்குடியிருப்பு பிரதேசசபை.
2021.12.03.

(CR 5570)1-6

# சமையலறையைக் கூட காக்க முடியாத அரசு!

## எள்ளிநகையாடுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ.3

நாட்டைப் பாதுகாப்போம் என்று கூறி, ஆட்சிக்குவந்த அரசால் வீட்டின் சமையலறையைக் கூடப் பாதுகாக்க முடியவில்லை என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸா நாயக்க.

மக்கள் விடுதலை முன்னணி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவத்துக்கு நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக 24 மணித்தியாலத்துக்குள் தீர்வு வழங்காது. இரண்டு வார காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கக் குழு அமைத்துள்ளார்.

கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் செயலணிகளைப் போன்று. இந்தக் குழுவும் பிரச்சினையை மூடி மறைக்கக் கூடாது.

நாட்டில் பல்வேறு பகுதிகளில் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சிலிண்டர் வெடிப்புச் சம்பவத்தின் வரலாற்றைத் தற்போது குறிப்பிட்டுக் கொண்டு, தற்போதைய வெடிப்புச் சம்பவம் புதிதானது அல்ல என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு கருத்துரைக்கிறார்.

சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவம் தொடர்பில் அரசின் நிலைப்பாட்டுக்கும், நிறுவனங்களின் நிலைப்பாட்டுக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இந்த அரசால் கடந்த காலங்களில் ஏற்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண குழுக்களும், ஜனாதிபதி செயலணிகளும் அமைக்கப்பட்டன. அவற்றால் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. காலப்போக்கில் பிரச்சினைகள் மூடிமறைக்கப்பட்டன. எரிவாயு சிலிண்டர் விவகாரத்தில் தொடர் பிரச்சினை காணப்படுகின்றது. ஆரம்பத்தில் எரிவாயு தட்டுப்பாடு. பின்னர் விலையேற்றம். பின்னர் தட்டுப்பாடு, இப்போது வெடிப்புச் சம்பவங்கள் என்று தொடர்கின்றது. இதில் ஏதேனும் மர்மம் உள்ளதா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது - என்றார்.

(ஏ-இ)


# சேவைநலன் பாராட்டும் வாழ்த்தும்

35 வருடங்களாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றி
நாளை (04.12.2021) ஓய்வுபெறும் எமது ஆசிரியை
செல்வி தனலஷ்மி புண்ணியமூர்த்தி
BA (Hons) பொருளியல் - 1985

### அதிபரின் வாழ்த்துச் செய்தி



"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றாமை நன்று"

என்பது வள்ளுவர் வாக்கு. அந்த வகையில் செல்வி தனலஷ்மி புண்ணியமூர்த்தி அவர்கள் தன்னுடைய துறையிலே முற்றாக ஈடுபட்டு உச்ச நிலையைத் தொட்டவர். கல்வி உலகிலே எல்லோராலும் மதிக்கப்பட்டும் போற்றப்பட்டவருமாக செயற்பட்டவர். நிறைகுடம் தளும்பாது என்பது முதுமொழி. அதற்கேற்றவாறு நிரம்பிய அறிவு செயற்திறன். சேவை மனப்பாங்கு என்பவற்றை நிறைவாகக் கொண்டிருந்தும் அவற்றுக்கெல்லாம் பெருமை பாராட்டாது அமைதியாக பொறுமையாக செயற்பட்டு வருபவர்.

ஒரு ஆசிரியர் தனித்து கற்பித்தலில் மட்டுமே விற்பன்னராய் இருப்பது போதாது.மாணவர்களின் சகல வித மான உயர்ச்சியிலும் பங்குகொண்டு அவர்களை அவையில் முந்தியிருக்க வைக்க வேண்டிய பொறுப்புணர்வு கொண்டவராக இருக்கவேண்டும். இதற்கு முன்னுதாரணமாக இவர் திகழ்ந்து வருகின்றார். பாடசாலையிலே கற்றலிலே பின்தங்கும் மாணவர்களை தனது வீட்டிற்கு அழைத்து தான் கற்பித்தும் ஏனைய பாடங்களை கற்பதற்கு வசதியினையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார். இவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் பலர் உயர்நிலைப்பீடங்களை அலங்கரித்து வருவது கண்கூடு.

க.பொ.த. உயர்தர பரீட்சகராக. மேலதிக கட்டுப்பாட்டு பரீட்சகராக,கல்வி வெளியீட்டுத் திணைக்கள நூல்களிற்கு வெளிவாரி மதிப்பீட்டாளராக. அபிவிருத்திக் கல்வி என்னும் நூலின் மொழிபெயர்பாளராக செயற்பட்டமை. கற்பித்தலுக்கு மேலதிகமாக இவரது கல்விப்புலத்தின் ஆளுமையை வெளிக்காட்டி நிற்கின்றது.

இவ்வாறு பல்வேறு பரிமாணங்களில் தன்னை நிலை நிறுத்திய செல்வி தனலஷ்மி புண்ணியமூர்த்தி அசிரியை எமது பாடசாலையிலும் 4 வருடங்கள் கடமையாற்றி தனது சேவையை நிறைவு செய்கின்றார். எமது மாணவர்களும் அந்தவகையில் புண்ணியம் செய்தவராகின்றனர்.

செல்வி தனலஷ்மி புண்ணியமூர்த்தி அவர்களின் ஆசிரியப்பணி அவர் பதவியில் ஓய்வு பெற்றாலும் தொடரும் என்பது எனது நம்பிக்கை. அவர் சீரும் சிறப்பும் பெற்று உடல் உள ஆன்மீக ஆரோக்கியத்துடன் வாழ அவர் தினமும் தொழும் நல்லைக் கந்தனின் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி சி.க. எழில்வேந்தன்
அதிபர்

Congratulations

(cs.41389) (2.6)




<u>ஆசிரியர் சேவை</u>

நு/ஹோல்புறூக் தமிழ் மகாவித்தியாலயம்
28.06.1985 - 01.02.1989
யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை
02.02.1989 - 01.08.1990
யா / வேம்படி மகளிர் கல்லூரி
02.08.1990 – 16.10.2017
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
17.10.2017 - இன்றுவரை

சேவைக்காலம் - 35 வருடங்கள்
எமது பாடசாலையில் சேவை - 4 வருடங்கள்
கற்பித்த பாடம் - பொருளியல்

ஆசிரியர் வட்டம் - யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

### கோட்டக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் யா/மத்திய கல்லூரியில் பொருளியல் பாட ஆசிரியராக சிறந்த சேவையாற்றி ஓய்வு பெறுகின்ற செல்வி புண்ணியமூர்த்தி தனலஷ்மி அவர் களின் சேவையைப் பாராட்டி நடை பெறும் நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின் றேன். "ஒரு ஆசிரியர் என்பவர் எப்பொழுதும் கற்றுக்கொண்டிருக்க வேண்டியவர்" என்பதற்கு உயிர்கொடுப்பது போல் தனது அயராத முயற்சியினால் பொருளியல் பட்டதாரியாகி. பட்டப்பின் கல்வி டிப்ளோமா மற்றும் கல்வி முதுமாணி ஆகியவற்றினூடாக தனது தொழில்வாண்மை விருத்தியை உயர்த்தி. ஒரு நல்ல ஆசானாகவும். வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.இவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.ஆ.யோகலிங்கம்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

### உதவிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பொருளியல் ஆசிரியர் செல்வி தனலஷ்மி புண்ணியமூர்த்தி அவர்கள் 04.12.2021 ஆம் திகதி ஓய்வுபெறுவதையிட்டு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன. முப்பத்தைந்து வருடங்களாக க.பொ.த.உயர்தர வகுப்புக்களில் பொருளியல் பாடத்தை கற்பித்து வருவதுடன் அப்பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியையாகவும் விளங்குகிறார். பொருளியல் பாட வினாத்தாள்களைத் தயாரித்தல்.கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பொருளியல் பாடநூல் மதிப்பீட்டாளராகவும் பொருளியல் பாட விடைத்தாள் மதிப்பீட்டின பரீட்சகராகவும் மேலதிக பிரதம பரீட்சகராகவும் கட்டுப்பாட்டு பரீட்சகராகவும் பணியாற்றிய சிரேஷ்ட ஆசிரியர் ஆவார். பொருளியல் பாடத்தின் மீது அளவற்ற விருப்பும் அப்பாடத்தினைக் கற்பிப்பதில் பெருமகிழ்வும் கொண்டிருப்பவர். விடைத்தாள் மதிப்பீட்டுக் காலத்தில் அவரது அனுபவங்களை பெற்றுக்கொண்டவர்களில் நானும் ஒருவனாவேன். அவரது ஓய்வு காலம் ஆரோக்கியமாகவும் மகிழ்வாகவும் அமைய எல்லாம் வல்ல நல்லூர் முருகனை வேண்டி அமைகின்றேன்.

அ.சுபாகரன்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம், நல்லூர்.

### ஆசிரியர் வட்ட தலைவரின் உள்ளத்தில் இருந்து



இன்று எம்முடன் எமது பாடசாலையில் சிறப்பாக ஆசிரிய பணியாற்றி ஓய்வு பெறும் எம் மதிப்புக்குரிய இந்த ஆசிரியை இனிவரும் காலங்களில் இனிதாக வாழ ஆசிரியர் வட்டம் சார்பாக வாழ்த்துகிறேன். இவர் வணிக துறையில் பொருளியல் பாடத்தை மிக சிறப்பாக கற்பிக்கும் வல்லமை பொருந்தியவர். இவர் ஓய்வு பெறுவது எமது பாடசாலைக்கு மிகவும் இழப்பாகும். எல்லோருடனும் மிகவும் சாந்தமாக பழக கூடிய ஒரு ஆசிரியை ஆவார். எமது பாடசாலையில் 4 வருடங்கள் கற்பித்தாலும் தனது மூப்பாலும் முன்மாதிரியான மாணவர் நலன் சார்ந்த சமூகசேவை செயற்பாடுகளாலும் எல்லோர் மனங்களிலும் ஆழமாக இடம்பிடித்த ஒரு ஆசிரியை ஆவர் .. புண்ணியத்தை தன் பெயராகவே கொண்ட செல்வி தனலஷ்மி புண்ணியமூர்த்தி ஆசிரியை தனது ஓய்வுக் காலத்தில் மிக சிறப்புற வாழ சிரம்தாழ்த்தி இறை ஆசி வேண்டுகின்றேன்.

தே.றெ.கிங்ஸ்லி
தலைவர் ஆசிரியர் வட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கடமையாற்றும்
**திருமதி சிவந்தி ஸ்ரீமதன்** ஆசிரியை
அவர்களின் அன்புத் தாயார்
**சிவநாயகம் வசந்தி**
13.11.2021 அன்று இறைபதமடைந்தார்.
இவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் உரும்பிராய்.

(cs. 41384) (2.6)


# கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாது திணறுகிறது அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.3

எரிவாயு தொடர்பான பிரச்சினை, முழு நாட்டுக்குமான பிரச்சினையாக உருவாகியுள்ள நிலையில், அரசு அதற்குப் பதிலளிக்க முடியாமல் திணறுகின்றது என்று - ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்கள் தற்போது எதிர்கொண்டு வரும் பெரியளவிலான பிரச்சினைகளை, நாட்டை ஆட்சி செய்பவர்கள் மறந்துவிட்டு செயற்படுகின்றனர்.

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் நீண்டவரிசையில் காத்திருக்கும் யுகம் காணப்பட்டது. அந்தக் காலப்பகுதியில், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க உருவாக்கிய பொருளாதார முறைமைக்கு அமைவாக ஒரு கிலோ கிராம் அரிசியை வாங்கிக் கொண்டு, நடமாட முடியாத நிலைமையே காணப்பட்டது.

உணவுப்பொருள்களுக்குத் தடைவிதித்தனர். குறிப்பாக ஆடைகளை வாங்கிக்கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டது. வாகனங்களுக்கு ரயர்களை வாங்கிக்கொள்ள முடியாது. அவரது ஆட்சி முறைமைக்கு வரலாறு நல்ல ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுத்தது. அதிக பெரும்பான்மையுடன் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு இந்த நாட்டை ஆள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டது.

தற்போது மீண்டும் மக்கள் நீண்டவரிசையில் காத்திருக்கும் யுகம் உருவாகி, அது சாதாரண ஒருவிடயமாக மாறிக் கொண்டுச் செல்கின்றது. மஞ்சள்தூள், பால்மா, சீனி, இரண்டு கிலோ கிராம் அரிசி என்பவற்றுக்கு இன்று நீண்ட வரிசையில் காத்திருக்கும் யுகம் உருவாகியுள்ளது.

பொருள்களை விலைக்கு வாங்கக் கூடியவர்களுக்கு பல்பொருள் அங்காடிகள், வியாபார நிலையங்களுக்குச் சென்று பொருள்களை வாங்க முடியாதளவு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இன்று எமது நாட்டில் பொருளாதாரம் 1970 களுக்கு மீண்டும் சென்றுள்ள நிலைமையைக் காணமுடிகின்றது.

இது இவ்வாறிருக்க புதி ததாக எரிவாயு சிலிண்டர் பிரச்சினை உருவாகியுள்ளது. கடந்த சில வாரங்களாக எரிவாயு சிலிண்டரை பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எரிவாயு சிலிண்டருக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும்போது அரசு பல காரணங்களைக்கூறியது. எரிவாயு தொடர்பான பிரச்சினை முழு நாட்டுக்குமான பிரச்சினையாக உருவாகியுள்ள நிலையில், அரசு அதற்குப் பதிலளிக்க முடி யாமல் திணறுகின்றது - என்றார். (எ-22)


# TENDER NOTICE
# DISTRICT SECRETARIAT, JAFFNA
## SALE OF USED VEHICLES
## IFB - 09

1) The District Secretary, Jaffna invites sealed bids from interested bidders for the sale of under mentioned vehicles that were used by the District Secretariat, Jaffna and Divisional Secretariats in the Jaffna District.

| S. No | Vehicle Number | Make / Class | Bid ID | Bid Security Amount Rs. | Validity period of Bid Security |
|---|---|---|---|---|---|
| Four Wheels Vehicles | | | | | |
| 1 | 251-0899 | TOYOTA - LN166R – PRMDS Dual Purpose Vehicle | JK/PROC/Veh.Au/09/39/2021 | 10% of Quoted Price | 14.04.2022 |

Motor Cycle

| S. No | Vehicle Number | Make / Class | Bid ID | Bid Security Amount Rs. |
|---|---|---|---|---|
| 2 | NP WN -4547 | TVS – Star - Motor Cycle | JK/PROC/Veh.Au/01/01/2021 | 3,000.00 |
| 3 | 156 -1639 | HERO HONDA – CD 100 Deluxe - Motor Cycle | JK/PROC/Veh.Au/01/02/2021 | 3,000.00 |
| 4 | NP MW - 3444 | TVS – Scooty Pep - Motor Cycle | JK/PROC/Veh.Au/01/03/2021 | 3,000.00 |
| 5 | NP MV - 9798 | BAJAJ - Motor Cycle | JK/PROC/Veh.Au/02/04/2021 | 3,000.00 |
| 6 | NP WN - 4532 | TVS – Star - Motor Cycle | JK/PROC/Veh.Au/02/05/2021 | 3,000.00 |
| 7 | NP MA - 7002 | TVS – Scooty Pep - Motor Cycle | JK/PROC/Veh.Au/02/06/2021 | 3,000.00 |
| 8 | NP TN - 5716 | TVS – Star - Motor Cycle | JK/PROC/Veh.Au/02/07/2021 | 3,000.00 |
| 9 | NP MI - 6171 | LML – Freedon KS -Motor Cycle | JK/PROC/Veh.Au/02/08/2021 | 3,000.00 |
| 10 | NP TN - 5732 | TVS – Star -Motor Cycle | JK/PROC/Veh.Au/03/09/2021 | 3,000.00 |
| 11 | 152 - 0859 | HONDA – CG125 (Japanese) - Motor Cycle | JK/PROC/Veh.Au/03/10/2021 | 3,000.00 |
| 12 | NP MI – 6181 | LML – Freedon KS - Motor Cycle | JK/PROC/Veh.Au/03/11/2021 | 3,000.00 |
| 13 | NP HG - 2489 | YAMAHA – LIBERO - Motor Cycle | JK/PROC/Veh.Au/04/12/2021 | 3,000.00 |
| 14 | 152 -0865 | HONDA – CG125 (Japanese) - Motor Cycle | JK/PROC/Veh.Au/04/13/2021 | 3,000.00 |
| 15 | NP VO - 4066 | BAJAJ - Platina - Motor Cycle | JK/PROC/Veh.Au/04/14/2021 | 3,000.00 |
| 16 | NP US - 9838 | BAJAJ - CT 100 –Motor Cycle | JK/PROC/Veh.Au/05/15/2021 | 3,000.00 |
| 17 | 160 - 7035 | BAJAJ - Bajaj 4S Champion - Motor Cycle | JK/PROC/Veh.Au/05/16/2021 | 3,000.00 |
| 18 | NP MI - 6088 | LML – Freedon KS - Motor Cycle | JK/PROC/Veh.Au/05/17/2021 | 3,000.00 |
| 19 | NP UD - 2374 | HERO HONDA – CD 100 Deluxe - Motor Cycle | JK/PROC/Veh.Au/05/18/2021 | 3,000.00 |
| 20 | 152 - 0868 | Honda – CG 125 (Japanese) - Motor Cycle | JK/PROC/Veh.Au/05/19/2021 | 3,000.00 |
| 21 | NP TA - 4812 | TVS – Scooty Pep + -Motor Cycle | JK/PROC/Veh.Au/06/20/2021 | 3,000.00 |
| 22 | NP VO - 6181 | TVS – Scooty Pep + - Motor Cycle | JK/PROC/Veh.Au/06/21/2021 | 3,000.00 |
| 23 | NP TA 4809 | TVS – Scooty Pep + - Motor Cycle | JK/PROC/Veh.Au/06/22/2021 | 3,000.00 |
| 24 | NP UD - 2360 | HERO HONDA – CD 100 Deluxe - Motor Cycle | JK/PROC/Veh.Au/07/23/2021 | 3,000.00 |
| 25 | NP VO - 4015 | BAJAJ - Platina - Motor Cycle | JK/PROC/Veh.Au/07/24/2021 | 3,000.00 |
| 26 | NP UD - 4941 | TVS – Scooty Pep + - Motor Cycle | JK/PROC/Veh.Au/07/25/2021 | 3,000.00 |
| 27 | NP MF - 6481 | BAJAJ - CT100 - Motor Cycle | JK/PROC/Veh.Au/08/26/2021 | 3,000.00 |
| 28 | NP MF - 6480 | BAJAJ - CT100 - Motor Cycle | JK/PROC/Veh.Au/08/27/2021 | 3,000.00 |
| 29 | 160 - 7032 | BAJAJ - Bajaj 4S Champion - Motor Cycle | JK/PROC/Veh.Au/08/28/2021 | 3,000.00 |
| 30 | NP MB - 0684 | KINETIC – BOSSV2 - Motor Cycle | JK/PROC/Veh.Au/09/29/2021 | 3,000.00 |
| 31 | 137 - 8380 | BAJAJ - Super Fe - Motor Cycle | JK/PROC/Veh.Au/09/30/2021 | 3,000.00 |
| 32 | NP MB - 0658 | KINETIC – BOSSV2 - Motor Cycle | JK/PROC/Veh.Au/09/31/2021 | 3,000.00 |
| 33 | NP MB - 0386 | KINETIC – BOSSV2 - Motor Cycle | JK/PROC/Veh.Au/09/32/2021 | 3,000.00 |
| 34 | 500 - 8891 | HONDA – C50 -Motor Cycle | JK/PROC/Veh.Au/11/33/2021 | 3,000.00 |
| 35 | NP MB -0392 | KINETIC – BOSSV2 - Motor Cycle | JK/PROC/Veh.Au/11/34/2021 | 3,000.00 |
| 36 | NP MB - 0681 | KINETIC – BOSSV2 - Motor Cycle | JK/PROC/Veh.Au/11/35/2021 | 3,000.00 |
| 37 | NP MB - 0680 | KINETIC – BOSSV2 - Motor Cycle | JK/PROC/Veh.Au/12/36/2021 | 3,000.00 |
| 38 | NP MA - 6987 | TVS – Scooty Pep - Motor Cycle | JK/PROC/Veh.Au/12/37/2021 | 3,000.00 |
| 39 | NP UD - 4632 | TVS – Scooty Pep + - Motor Cycle | JK/PROC/Veh.Au/12/38/2021 | 3,000.00 |

2) Interested bidders shall obtain the prescribed each bidding documents on payment of a non-refundable deposit of a sum of Rs.250/= along with a written request to the **"District Secretary, District Secretariat, Jaffna** between the office hours of 9.00 a.m – 2.30 p.m from 03.12.2021 to 16.12.2021.

3) The bidders shall view the said vehicles between 9.30 a.m. to 3.00 p.m. from 03.12.2021 to 16.12.2021 on working days at the **in Store of the District Secretariat, A9 Road Navatkuly, Jaffna**

4) A bidder can submit bids in respect of one or more vehicles, but for each vehicle separate bidding documents should be used.

5) For vehicles denoted by serial number 01 (four wheels vehicles) bidders shall furnish 10 % of the quoted bid price as Bid Security from any Commercial Bank approved by the Central Bank of Sri Lanka using the standard format given with the bidding document. **Bid security shall be valid up to 14.04.2022** and for Motor Cycles and scrap denoted by serial number 02 - 39 (Motor Cycle) Bidders have to **pay a refundable deposit as bid security, by cash** at the **District Secretariat, Jaffna.** As mentioned in the above table.

6) The sealed bid which should be addressed to the **Chairman, Dept. Procurement Committee, District Secretariat, A9 Road, Jaffna** to reach on or before **17.12.2021, 10.30 a.m.** , with the word " **Bid to purchase used vehicle –Vehicle No ............**" on the left hand top corner of the envelop. The bids would be opened immediately after the time of closure of the said bids. Either bidder or their authorized representatives would be permitted to be present at opening of bids.


7) The Chairman of the procurement committee reserves the right to accept or reject any bid, and to annul the bidding process and reject all bids at any time prior to award, without thereby incurring any liability to Bidders.

**Chairman,**
**Department Procurement Committee,**
**District Secretariat,**
**Jaffna**

(CR 36122)1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 20 . 08 . 1955

இறப்பு 03 . 12 . 2017

## அமரர் வல்லி மகேந்திரன்

(சமாதான நீதவான் JP)

கலிகையுறை கந்தன் வழி வாழ்ந்து - எமை
கண்ணியமாய் வளர்த்து வாழ வழி வகுத்து
வையத்துள் நாம் நல்வாழ்வு வாழ
வழி காட்டிய செல்வம் அப்பா!
ஆலம் விழுதுகள் போல் ஆயிரம் உறவுகள் கொண்டு
குடும்ப உறவுகள் வீழ்ந்து விடாதிருக்க
குல விளக்காய் இருந்தவர்-எம் அப்பா!
கடவுள் எமக்கு காட்டி கொடுத்த கண்கண்ட தெய்வம் எம் அப்பா!
காலனின் சொல் கேட்டு கடவுளிடம் சென்றீரே -எம் அப்பா!
சோகத்தை தந்து விட்டு சொல்லாமல் சென்றதென்ன...
நான்காண்டு சென்றாலும் முடியாது எம் துயர்... அப்பா!! அப்பா!!!

உங்கள் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி ம.தேவமலர்,
பிள்ளைகள்: மதன், மதனா,மோகன்ராஜ், பிறேமன்.
மருமக்கள்: சிந்துஜா, தீபன், தனுசா
பேரப்பிள்ளைகள் : திரிஷிகா, அஷ்ஷிகா, அனன்யா, சந்தோஷ், சஞ்சனா, ஹரிகனன், யஸ்மித்ரா, அஸ்வத், சஞ்சை, ஆரத்தியன்.

துன்னாலை மேற்கு,
கரவெட்டி.
077 707 8628

(IN.17821) (2.6)

# முதலாம் ஆண்டு நினைவில்....



மண்ணில் 27 . 02 . 1943

விண்ணில் 13 . 12 . 2020

## கார்த்திகேசு சுப்பிரமணியம் (மணிப் பரியாரியார்)

ஆயுள்வேத வைத்தியர்

*திதி: சதுர்த்தசி*

ஆண்டொன்று சென்றது! அழுகைபோய் அன்பு பெருகிற்று
அருகிருந்து நீங்கள் அறிவுரை சொல்வதுபோல் அயர்கிறோம்!
அடைமொழி தேடுகிறோம் ! கிடைக்கவில்லை
அப்பா உங்களிடம் இணைப்பதற்கு

அயலவர் அந்நியர் எவர்க்கும் மருந்து மட்டுமா கொடுப்பீர்கள்
அருமருந்தன்ன அறிவுரையும் சேர்ப்பீர்!

அஞ்சா நெஞ்சம்! அறிவுடமை அயரா உழைப்பு
அனைத்தும் உங்கள் தனியுடமை!
ஆன்றோர் காட்டிய வழியது வாழ்ந்தீர்
அன்புடன் "மணி" என அழைக்கும் அந்தஸ்தும் பெற்றீர்
ஆர் பேறுவார் நும் இடம் யார் தருவார் நும் பணி!

மருத்துவம் மட்டுமா கற்றீர்கள்
மகத்துவம் தரும் உலகவிவகாரம்! உவப்பிலா அறிவு!
மண்டியிடா தனித்தன்மை!
மாற்றோரும் போற்றும் மாண்பு!
மறக்க முடியுமா உங்கள் மனித நேயத்தை!

மன்னிப்பு! அது உங்கள் மகுடம்
மாறா அன்பால் மாந்தருள் மாணிக்கமானீர்கள்!
மலைபோல் உயர்ந்தீர் வாழ்வில்
மருப்பென கொண்டீர் ! மனித வாழ்வை

'மணி' யான அப்பாவே
ஆண்டொன்று சென்றது ! அழுகை போய் அன்பு பெருகிற்று!
அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்!

குடும்பத்தினர்

(cr.36114) (2.6)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவரும் முத்தையா வெதுப்பக உரிமையாளருமாகிய திரு. கந்தசாமி குணரத்தினம் அவர்களின் அன்புத் தாயார்

## கந்தசாமி மகேஸ்வரி

அவர்கள் இறைவனடி சேர்ந்துள்ளார். அவருக்கு எமது கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

தலைவர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்,
யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

(cr.36118) (2.6)

## வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல் - வெங்கலச்செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து), செட்டிகுளம்

வரையறுக்கப்பட்ட வெங்கலச்செட்டிக்குளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின், குறைந்தபட்சம் ரூபா 100.00 பங்குப் பணம் செலுத்தி ஒரு வருடம் பூர்த்தியான 31.10.2021 திகதியில் முடிவுறுத்திய சங்கத்தின் உபவிதிகளுக்கமைய வாக்களிக்கத்தகுதிபெற்ற அங்கத்தவர்களின் பெயர், விபரங்கள் உள்ளடங்கியவாக்காளர் பட்டியல் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் 01.12.2021 தொடக்கம் 20.12.2021 வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை அலுவலகக் கடமை நேரங்களில் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வெங்கலச்செட்டிகுளம்
பல நோ.கூ.சங்கம் (வ/து)செட்டிகுளம்

(cr.00930) (2.6)

## முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிற்கான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குனர்களை பதிவு செய்தல் 2022

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2022 ஆம் ஆண்டிற்கான கீழ்க்குறிப்பிடப்படும் ஒப்பந்தக்காரர்கள் மற்றும் பொருட்கள், சேவைகள், வழங்குனர்கள் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்யவிரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாதிரி படிவத்திற்கு அமைய தாமாக தயாரித்தோ அல்லது மாவட்டச் செயலக கொள்ளல்கிளை மற்றும் பிரதேச செய்லகங்கள் ஆகியவற்றில் (02.12.2021ம் திகதி தொடக்கம் 30.12.2021ம் திகதி வரை) அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் www.mullaitivu.dist.gov.lk எனும் இணையத்தளத்திலும் தரவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம். பதிவு செய்வதற்கான இறுதி திகதி **30.12.2021** ஆகும். இறுதி திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**கட்டட நிர்மாண வேலைகள்**

ஒப்பந்ததார்கள் ICTAD புத்தகத்தின் பதிவு பக்கம் மற்றும் முதல் பக்கம் என்பவற்றை சமர்ப்பித்தும்
கீழே உள்ள கட்டண விபரத்திற்கு ஏற்றவாறு மீளளிக்கப்படாத வைப்பு பணமாக செலுத்தி நிறுவனத்தினைப் பதிவுசெய்தல் வேண்டும்.

| ஒப்பந்தத் தொகை | பதிவுக்கட்டணம் |
|---|---|
| ரூபா 2,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 2000.00 |
| ரூபா 2,000,000 இற்கு அதிகமானதும் 5,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 3000.00 |
| ரூபா 5,000,000 இற்கு அதிகமானதும் 10,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 5000.00 |

**பொருட்கள் சேவைகள் வழங்குனர்**

பொருள், சேவை வழங்குனர்கள் ஒவ்வொரு வகை வழங்குனர் பதிவிற்கும் தனித்தனியாக (தொகுதி ஒன்றிற்கு) ரூபா 300/= இனை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

❖ கட்டட நிர்மான ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொருட்கள் சேவைகள் வழங்குனர்களின் வியாபாரப்பதிவு கட்டாயமாகும் என்பதுடன் அதற்குரித்தான பதிவுச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்திய பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

**கட்டண விபரம்**

வழங்குனர் பதிவுக்கான கட்டணத்தை "மாவட்ட செயலாளர், மாவட்டசெயலகம், முல்லைத்தீவு என்னும் பெயரில் உள்ள இலங்கைவங்கி கணக்கிலக்கம் 7041979 ற்கு பணமாக வைப்பிலிட்டு வைப்பிலிட்ட பணத்திற்கான வங்கிவைப்புசிட்டை பிரதியினை இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லது நேரடியாக மாவட்ட செயலக நிதிக் கிளையில் சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சிட்டை (பொது 172) விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

க. விமலநாதன்,
மாவட்டச் செயலாளர்,
முல்லைத்தீவு மாவட்ட செயலகம்,
முல்லைத்தீவு.

(CR 36121) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## குவிந்தன் ரிஷா

பிறப்பு 09.11.1985 இறப்பு 28.11.2021



யாழ். கைதடியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் சுக் மாநிலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குவிந்தன் ரிஷா கடந்த (28.11.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இந்திரராஜா - விஜயகுமாரி தம்பதிகளின் தவப் புதல்வியும், குவிந்தனின் அன்பு மனைவியும், ரிஷானி, கியாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினம் இந்திரா, காலஞ்சென்ற சின்னத்தம்பி - பாக்கியம் ஆகியோரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சபாரத்தினம்- வள்ளி காலஞ்சென்ற கனகையா - அழகம்மா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.12.2021 வெள்ளிக் கிழமை காலை 8.30 - 12.00 மணிவரை சுவிஸ்நேரப்படி Krematorium Nordheim, Kaferholzstrasse, 101/8046 Zurch, SwizerLand நடைபெறும் அதேதினம் காலை 11.30 - 4.00 மணிவரை அவரது கைதடி இல்லத்தில் இலங்கை நேரப்படி துயர்பகிர்வு நடைபெறும் என்பதனை உற்றார், உற வினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

கைதடிச் சந்தி,
கைதடி.

தகவல்:
சி. சின்னத்துரை - 077 756 0252
ச.இந்திராசா சுவிஸ் - 0041 7948 82818

(cs.41385) (2.6)

### சிறுத்தையிடமிருந்து மகனை மீட்ட
# வீரத்தாய்



புதுடில்லி, டிசெ.3

பழங்குடியினப் பெண் ஒருவர் நிராயுத பாணியாக நின்று சிறுத்தையுடன் போராடி தன் 6 வயது மகனை மீட்டுள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் சித்தி மாவட்டத்தில் உள்ள சஞ்சய் காந்தி தேசிய பூங்காவின் அருகே இருக்கும் கிராமத்தில் இந்த மெய் சிலிர்க்க வைக்கும் சம்பவம் நடந்துள் ளது. குறித்த பெண் கணவரின் வருகைக்காக வீட்டுக்கு வெளியே தன் ஆறு வயது மகன் ராகுல் மற்றும் இரு குழந்தைகளுடன் அமர்ந்திருந்தார்.

தூரத்தில் பதுங்கி இருந்த சிறுத்தை ராகுலைத் தாக்க நேரம் பார்த்துக் கொண்டு இருந்துள்ளது. சமயம் பார்த்து ஒரே பாய்ச்சலில் ராகுல் மீது பாய்ந்து அவனை பற்றிக்கொண்டு ஓடியது.

இதை சற்றும் எதிர்பார்க்காத தாய் சிறுத்தையை பின்தொடர்ந்து விரட் டிச் சென்று சிறுத்தையை நோக்கி பாய்ந்துள்ளார். அவருடைய முழு பலத்தையும் பிரயோகித்து குழந்தையை சிறுத்தையின் பிடியில் இருந்து மீட்டுள்ளார். பின் குழந்தையை கையில் ஏந்தியவாறு அங்கிருந்து ஓடியுள்ளார். ஆனால் சிறுத்தை மீண்டும் அவரைத் தாக்கியுள்ளது. அந்நேரம் கிராமவாசிகளும் விரைந்து வந்ததால் சிறுத்தை காட்டுக்குள் ஓடிமறைந்துவிட்டது. (ச)



## ரஷ்ய அதிபர் இந்தியா வருகை

புதுடில்லி, டிசெ. 3

ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் எதிர்வ ரும் திங்கட்கிழமை இந்தியா வர உள் ளார். இதன்போது இருநாடுகளுக்கு இடையே ஆயுத ஒப்பந்தங்கள் செய் யப்பட உள்ளன. இந்தியா சுமார் 7 லட்சத்து 50 ஆயிரம் தானியங்கி ஏ. கே 203 துப்பாக்கிகளை வாங்கும் ஒப் பந்தம் புடின் வருகையின் போது கைச் சாத்திடப்படவுள்ளது. (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பேச்சு, செயல்களில் இன்று மிகவும் கவனமாக இருக்கவும். இன்று நன்மைகளை எதிர்பார்க்கலாம். ஆன்மிகப் பணி செய்வீர்கள். விலகிச் சென்ற கூட்டாளிகள் மீண்டும் வந்து சேரலாம்.

**இடபம்:** மனதில் உற்சாகம் நிலவும். சேமிப்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கலகலப்பான நாள். வியாபாரிகள் கொடுக்கல், வாங்கலை ஒழுங்குபடுத்துவீர்கள்.

**மிதுனம்:** உணர்ச்சிவசப்படுவதை தவிர்க்க வேண்டிய நாள். இன்று முக்கிய முடிவு எடுப்பீர்கள். குழந்தை களின் முன்னேற்றமும், உயர்வும் உங்களை மகிழ்விக்கும்.

**கடகம்:** உற்சாகத்துடன் செயல்பட்டு சூழலை கலகலப்பாக்குவீர்கள். மன நிம்மதி அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். பணப்பற்றாக்குறை தீரும். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** உங்களிடம் உள்ள நிலத்தை நல்ல விலைக்கு விற்பீர்கள். பேச்சில் கவனம் தேவை. பயணத்தால் உற்சாகம் கூடும். பிறருக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பயம் ஒன்று தீரும்..

**கன்னி:** துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். வீண் விரயம் குறையும். நீங்கள் எதிர்பார்த்த உதவிகள் எளிதில் கிடைக்கும். நிம்மதி ஏற்படும். உறவி னர்களால் நன்மை ஏற்படும். உழைப் பால் ஆதாயம் உண்டு..

**துலாம்:** நீங்கள் தொட்டது துலங்கும்நாள். நட்பால் மகிழ்ச்சி அதிகரிக்கும். வீடு, நிலம் போன்றவை வாங்குவதில் ஆர்வம் காட்டு வீர்கள். புதிய நண்பர்கள் சிறப்பாக அமைவர். தாமதங்கள் நீங்கும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் உள்ள பெரியோரின் உடல்நலம் சீராகும். உற்சாகமாக பணிச்சுமையை சுமப்பீர்கள். யோகமான நாள். புதிய பய ணத்திட் டங்கள் உருவாகி உற்சாகத்தைக் கூட்டும். சக வியாபாரிகள் அனுசரணையாக நடந்துகொள்வர்.

**தனுசு:** நிதானமாக செயற்பட்டு முக்கியமான வேலைகளை முடிப் பீர்கள். வேலைப்பளு அதிகரித்தாலும் அதை உற்சாகமாக செய்து முடிப் பீர்கள். தொழிலில் லாபம் வரும். மாண வர்கள் உயர்வடைவீர்கள்.

**மகரம்:** குடும்பத்தில் சிறு சிறு மகிழ்ச்சிகள் ஏற்படும். பணி, வியாபார விடயம் ஒன்றில் நல்ல தீர்வு காண்பீர்கள். உற்சாகத்துடன் செயற்பட்டு வெற்றிப் பாதையில் பயணிப்பீர்கள். உத்தி யோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பம்:** நீண்ட காலமாக எதிர்பார்த்த நன்மை ஒன்றை பெறுவீர்கள். வியா பாரிகள் ஓய்வின்றி உழைத்து நன்மை காண்பர். பணவரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். இன்று அம்பிகையை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்

**மீனம்:** உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சியை முன்னின்று நடத்துவீர்கள். பொருளா தார வளர்ச்சி காரணமாக மகிழ்ச்சி அடைவீர்கள். உற்சாகம் கூடும். செயற்பாடுகளில் கூடுதல் கவனம் [illegible] வேலைப்பளு அதிக்க நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல் - வெங்கலச்செட்டிகுளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து), செட்டிகுளம்

வரையறுக்கப்பட்ட வெங்கலச்செட்டிக்குளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின், குறைந்தபட்சம் ரூபா 100.00 பங்குப் பணம் செலுத்தி ஒரு வருடம் பூர்த்தியான 31.10.2021 திகதியில் முடிவுறுத்திய சங்கத்தின் உபவிதிகளுக்கமைய வாக்களிக்கத்தகுதிபெற்ற அங்கத்தவர்களின் பெயர், விபரங்கள் உள்ளடங்கியவாக்காளர் பட்டியல் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் 01.12.2021 தொடக்கம் 20.12.2021 வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை அலுவலகக் கடமை நேரங்களில் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்**
**வெங்கலச்செட்டிகுளம்**
**பல நோ.கூ.சங்கம் (வ/து)செட்டிகுளம்**

(cr.00930) (2.6)

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு
## முதலாம் பகிரங்க ஏலம்- 2022

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2022 இலிருந்து 31.12.2022 வரையான காலப்பகு திக்கு நடத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

பகிரங்கஏலப்பத்திரம் வழங்கும் காலம் :- 03.12.2021 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 08.12.2021. முற்பகல் 11.00 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)

பகிரங்கஏலத் திகதி :- 2021.12.08 மு.ப. 11.30 மணி

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத ஏலப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்க கூடிய ஏலவைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | தற்போது கேள்வி கோரிய தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 1 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,000.00* | 50,000.00 | **4,900,500.00** |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழிறைச்சிக்கடை | *1,000.00* | 22,000.00 | **2,139,380.10** |
| 3 | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,000.00* | 5,000.00 | **463,320.00** |
| 4 | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | *1,000.00* | 2,000.00 | **104,247.00** |
| 5 | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,000.00* | 13,000.00 | **1,248,318.00** |
| 6 | விசுவமடு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | *1,000.00* | 8,000.00 | **768,042.00** |
| 7 | இரணைப்பாலை மாட்டிறைச்சிக்கடை | *1,000.00* | 3,000.00 | **217,404.00** |
| 8 | மந்துவில் பொதுச்சந்தை | *1,000.00* | 2,000.00 | **43,659.00** |
| 9 | மந்துவில் கோழியிறைச்சிக்கடை (மட்டுப்படுத்தப்பட்டுள்ளது) | *1,000.00* | 2,000.00 | **23,255.10** |
| 10 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை (இல-02) | *1,000.00* | 2,000.00 | **28,512.81** |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,000.00* | 2,000.00 | **59,251.50** |
| 2 | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,000.00* | 2,000.00 | **47,891.70** |
| 3 | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | *1,000.00* | 2,000.00 | **41,004.00** |
| 4 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | *1,000.00* | 3,500.00 | **271,755.00** |
| 5 | கற்சிலைமடு கோழியிறைச்சிக்கடை | *1,000.00* | 2,500.00 | **100,438.20** |
| 6 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை(இல-01) | *1,000.00* | 1,000.00 | **2,494.80** |
| 7 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை(இல-02) | *1,000.00* | 1,000.00 | **2,494.80** |
| | ஒலுமடு உப அலுவலகம். | | | |
| 1 | திருமுறிகண்டி கட்டண கழிப்பறை | *1,000.00* | 2,000.00 | **50,074.20** |
| 2 | மாங்குளம் கோழியிறைச்சிக்கடை | *1,000.00* | 3,000.00 | **238,877.10** |
| 3 | மாங்குளம் பொதுச்சந்தை | *1,000.00* | 3,500.00 | **286,198.20** |
| 4 | மாங்குளம் மாட்டிறைச்சிகடை | *1,000.00* | 2,000.00 | **19,170.00** |
| 5 | மாங்குளம் கருவாட்டுக்கடை | *1,000.00* | 1,000.00 | **2,494.80** |

**நிபந்தனைகள்.**

1. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. முதலாம் சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2021.12.10 ஆம் திகதிக்கு பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். தவறின் அடுத்த தர சித்திதாரர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கப்படும் அவர்கள் பெற்றுக் கொள்வதாயின் சம்மதக் கடிதத்தினை 2021.12.10 பிற்பகல் 3.30 மணிக்கு முன்பு சமர்பிக்கப்பட வேண்டும் அவர்கள் 1/3 பகுதியை 2021.12.13 ஆம் திகதிக்கு மு.ப 10.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். அத்துடன் மிகுதித் தொகையினை 6 சமபங்குப்படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அம் மாதம் இறுதித் திகதிக்கு முன்னைய வேலைநாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் வடக்கு மாகாண எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஏலத்திற்கு விண்ணப்பதாரர் மட்டும் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.
4. ஏனைய நிபந்தனைகள் உதயன் நாளிதளின் 2021.10.18 ஆம் திகதிய பத்திரிகையில் உள்ள எமது சபை கோள்வி கோரல் நிபந்தனைகளே அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளவும்.

**அ.தவகுமாரன்,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**
**2021.12.03.**
தொலைபேசி இல:- 0212290 - 0212291023 email-pkipsmullai@gmail.com.

(cr.5571) (3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



யாழ் மிருசுவில்
அ.த.க. பாடசாலை,
மிருசுவில்

எமது பாடசாலையில்
21.08.1988 - 19.01.1992
01.01.1994- 09.01.2005
18.08.2020 - 02.12.2021
ஆகிய காலங்களில் சேவையாற்றி ஓய்வுபெறும் ஆசிரியை

**திருமதி பத்மினிதேவி அமிர்தலிங்கம்**
**விவசாயம் (SLTS I)**

ஓய்வுபெறும் ஆசிரியை அவர்கள் தனது ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அதிபர், ஆசிரியர்கள்
யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை.

(CR 5574)1-6

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர்**
**சாத்தன் சுப்பிரமணியம்**



நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி ஆண்டுகள் எட்டு சென்றாலும் எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள் என்றும் பசுமையாகவே இருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 15.09.1955 மறைவு 03.12.2013

**நினைவுகளுடன்**
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

(CS 728) 1/6

## மரண அறிவித்தல்



**திரு.கார்த்திகேசு தம்பிராசா**
**(ஓய்வுநிலை ஆசிரியர்)**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கார்த்திகேசு தம்பிராசா (01.12.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு பொன்னம்மா தம்பதியரின் அருமை மகனும் தம்பு நாகரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, இராசையா, கந்தையா மற்றும் சரஸ்வதி, நாகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் தவமணியின் அன்புக் கணவரும், சரஜென்மன் (லண்டன்), சத்தியவண்ணன் (ஜேர்மனி), உமா (ஆசிரியை-யா/ நடேஸ்வராக் கல்லூரி), நவநீதன் (லண்டன்), யாழினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருட்செல்வி, சுதர்சினி, சிவகுமார் (ஆசிரியர், யா/குளமங்கால் R.C), தவமங்களம், மகிழ்ராசா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், குகப்பிரியன், தணிகன், இராகுலன், விசாகன், இன்பகி, கவீன், கஜிதா, பகீர்த், விபுஜா, நிரஜா, சஜீபன், பேரஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (05.12.2021) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி, கோவில் வீதி,
இணுவில்.
தொ.பே:077 6458440

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 731)1-6

## ஒமிக்ரோன்...

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், ஒமிக்ரோன் திரிபின் வீரியம் தொடர்பான விஞ்ஞானபூர்வ ஆதாரங்கள் கிடைக்கப் பெறும் வரையிலும் அதுபற்றி உலகம் பொதுவான அபிப்பிராயமொன்றுக்கு வரும்வரையிலும் நாம் காத்திருக்கமுடியாது. அதனை எதிர்கொள்வதற்கான முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். ஒமிக்ரோன் திரிபு குறித்து மட்டுப்படுத்தப்பட்டளவிலான தகவல்களை அடிப்படையாகக்கொண்டு அதனைக் கையாள்வதற்கான செயற்றிட்டங்கள் உடனடியாக வகுக்கப்படவேண்டும்.

கொரோனா வைரஸின் ஏனைய திரிபுகளுடன் ஒப்பிடுகையில் ஒமிக்ரோன் திரிபு மிகவும் வீரியம்கூடியது என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. அதேவேளை, நாட்டின் சனத்தொகையில் பெருமளவானோர் முழுமையாகத் தடுப்பூசி பெற்றிருக்கின்ற சூழ்நிலையில் வெளிநாட்டவர்கள் நாட்டுக்குள் நுழைவதைத் தடை செய்தல் மற்றும் அவர்களுக்கான சுகாதாரப்பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை மேலும் வலுப்படுத்துதல் உள்ளடங்கலாக பல நடவடிக்கைகளை விரைந்து எடுக்கவேண்டியது அவசியம் - என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நோர்வேயின் ஒஸ்லோவிலும் ஒமிக்ரோன் கொத்தணி கண்டறியப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (த-இ)

## யாழ். நல்லூரிலும்...

டது. பெரும் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் உட்பட நாடு முழுவதும் தினமும் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்து வருகின்றன. இதுவரை 50க்கும் மேற்பட்ட இத்தகைய சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (த)

## நேற்றும்...

நிலையில் ஒவ்வொரு சடலங்கள் நேற்றுக் கரையொதுங்கின.

வடமராட்சி பகுதியில் மணற்காடு மருதங்கேணி பகுதிகளில் ஒருவாரத்தில் இவ்வாறு 4 சடலங்கள் கரை ஒதுங்கியநிலையில், மேலும் இரு சடலங்கள் நேற்று ஒதுங்கியுள்ளன. இதன்படி இதுவரை அடையாளம் தெரியாத நபர்களின் 6 சடலங்கள் ஒதுங்கியுள்ளன. பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சடலங்கள் கரையொதுங்குகின்றமை குறித்த மர்மம் புரியவில்லை. (த-113, 125)

## ஒதியமலை...

னர் கொன்றொழித்த 37ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

1984 ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி அதிகாலை வேளையில் கிராமத்துக்குள் புகுந்த இராணுவத்தினரும் சிங்களக் காடையர்களும் ஒன்றுசேர்ந்து கிராமத்திலிருந்த இளைஞர்கள் மற்றும் ஆண்களை சனசமூக நிலையத்துக்கு அழைத்துச் சென்று அவர்களது ஆடைகளை களைந்து அவர்களை கட்டி 27 பேரையும் துப்பாக்கிச் சூடுநடத்தியும்வெட்டியும்மிலேச்சத்தனமான முறையில் படு கொலை செய்திருந்ததுடன், 5 பேரைத் தம்முடன் அழைத்துச்சென்றிருந்தனர். அவர்களும் பின்னர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒதியமலை சனசமூகநிலைய வளாகத்தில் படுகொலைசெய்யப்பட்டோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் உணர்வுபூர்வமாக நேற்று நினைவேந்தல் நடை பெற்றது. தொடர்ந்து, படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக ஒதியமலைப் பிள்ளையார் கோவிலில் விசேட ஆத்ம சாந்திவழிபாடுகளும்நடைபெற்றன. குறித்த நிகழ்வில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுடன் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர் கள் பலரும் கலந்துகொண்டனர். (த-19)

## தொற்று...

தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 65 ஆயிரத்து 468 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, இலங்கையில் மேலும் 27 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 399 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## கடற்படையினருக்கு...

என்று நேற்றுமுன்தினம் ஆளுநர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், நேற்று நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்றையதினம் (நேற்றுமுன்தினம்) நான் காணி உரிமையாளர்களுடன் பேசவுள்ளேன் என்று வெளியான செய்தி பிழையானது.

இன்றைய தினமே (நேற்று) முதன்முதலாக காணி உரிமையாளர்களுடன் நான் நேரடியாகக் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளேன்.

காணி உரிமையாளர்களுடன் பேசி காணியின் உறுதிகளை சரி பார்த்து, காணி உரிமையாளர்களின் நிலைப்பாடுகளை அறிந்த பின்னரே முடிவுகளை எடுக்க முடியும்- என்றார். (த-20)

## காணிசுவீகரிப்புக்கு...

தாயகம்!, ஆளுநரே! தமிழர்களின் பூர்விக நிலங்களை அபகரிக்க துணை போகாதே!, எமது கடல் எமக்கு வேண்டும்!, எமது நிலம் எமக்கு வேண்டும், எமது நிலமே எமக்கு வேண்டும்!" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களில் இருவரை சந்திப்பதற்காக ஆளுநரின் செயலர் அழைத்ததோடு பின்னர், காணி உரிமையாளர்களை ஆளுநர் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, ஆளுநரின் செயலாளரை சந்தித்தபின்னர் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டா ளர் சிறிகாந்தன், ஆளுநரின் செயலாளர் நேற்றையதினம் (நேற்றுமுன்தினம்) மக்களை ஆளுநர் சந்திப்பது தொடர்பாக எந்தவித அறிவிப்புக்களும் ஆளுநர் அலுவலகத்தால் வழங்கப்பட வில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும், பிரதேச செயலாளரிடம் தொடர்பு கொண்டு நேற்றைய தினம் எதற்காக ஆளுநருக்கு தெரியாது கூட்டத்தை தயார் படுத்தினீர்கள் என்று கேட்டபொழுது மாவட்டச்செயலரே குறித்த கடிதங்களை மக்களுக்கு வழங்கி கூட்டத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்குமாறு கூறினார் என்றும் பின்னர், 12. 45 மணியளவில் மாவட்டச்செயலர் மீண்டும் தொடர்புகொண்டு இந்தக்கூட்டத்தை இடைநிறுத்துமாறு கூறினார் என்றும் தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தின்போது காணி உரிமையாளர்களுடன் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன், வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான சிவ[illegible] மற்றும் சமூக ஆர்வலர்[illegible] கலந்துகொண்டனர். (த-125)

## அசாத்சாலி...

துக்கு இடமின்றி நிரூபிக்க முடியாது என்று தெரிவித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா அசாத் சாலியை வழக்கிலிருந்து விடுதலைசெய்தார்.

ஷரியா சட்டம் தொடர்பாக, அசாத் சாலி தெரிவித்த கருத்துக்கள் சமூகங்களுக்கிடையிலான சகோதரத்துவத்தையும், நல்லிணக்கத்தையும் சீர்குலைப்பதாகக் காணப்பட்டது என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி அன்று கைது செய்யப்பட்ட அவர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இதேவேளை, இந்தவழக்கு நிறைவுக்கு வந்தகையோடு, மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்று அழைப்பாணை அனுப்பியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மொஹம்மட் முசம்மில், ஜயநந்த வெல்லாவல, நிமல் பியதிஸ்ஸ ஆகியோருக்கே இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

அசாத் சலி நீதிமன்றால் நிரபராதி எனக் கூறி இன்று விடுவிக்கப்பட்ட பின்னர், அசாத் சாலியின் சார்பில் நீதிமன்றில் முற்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன முன்வைத்த வாதத்தை அடுத்து இந்த அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

பொய்யான முறைப்பாட்டை வேண்டுமென்றே முறைப்பாட்டாளர்கள் முன்வைத்து, அதனூடாக அசாத் சாலியை சுமார் 9 மாதங்கள் சிறைப்படுத்தி தடுத்து வைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று, ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன மன்றில் சுட்டிக்காட்டினார். அதனையடுத்தே, அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## சுட்டுக்...

யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை இரண்டு பேருக்கும் இடையே இணக்கத்துடன் முடிக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முயற்சித்தபோதும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட் டால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையை சேர்ந்த ஜெயச்சந்திரன் சுலக்சன் என்ற உதயன் ஊடகவியலாளரையே பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் துப்பாக்கியை காண்பித்து மிரட்டி, அநாகரிகமாகப் பேசியும் உள்ளார்.

பருத்தித்துறை நீதிமன்றுக்கு அருகில் உள்ள தேநீர் கடை உரிமையாளருக்கும், பருத்தித்துறை நீதிமன்ற வாயில் காவல் கடமையில் ஈடுபடும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் இடையில் முரண்பாடு நிலவி வந்துள்ளது.

இந்தநிலையில், பருத்தித்துறை நீதிமன்ற பாதுகாப்பு கடமையில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று ஈடுபட்டிருந்தார். அருகிலிருந்த தேநீர் கடைக்கு வருபவர்கள் கடைக்கு அருகில் தமது வாகனங்களை நிறுத்த முற்பட்டபோது, அந்தஇடத்தில் வாகனங்களை நிறுத்த முடியாது எனவும் நீதிமன்ற உத்தரவு என்றும் கடைக்கு வருபவர்களை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கையில் அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் ஈடுபட்டிருந்தார்.

இந்தநிலையில், கடைக்கு வந்த நபர் ஒருவர் கடைக்கு முன்பாக தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு தேநீர் அருந்த உள்ளே சென்றபோது, அவரிடம் வந்து மோட்டார் சைக்கிளை எடு என பொலிஸ் உத்தியோகத்தர் அநாகரிகமாகப் பேசி நடந்துகொண்டுள்ளார்.

அதன்போது குறித்த நபரும், இந்தஇடத்தில் வாகனம் நிறுத்தத் தடை என எவ்வித அறிவித்தலும் இல்லை வழமையாக இந்தஇடத்தில் நாங்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்துகின்றோம் இன்றைக்கு திடீரென வந்து நிறுத்த வேண்டாம் என அநாகரிகமாக என்னிடம் பேச முடியாது எனக் கூறியுள்ளார்.

அதனையடுத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அந்தநபர், தனது கடமைக்கு இடையூறு விளை வித்தார் என்றுகூறி கைதுசெய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று தடுத்து வைத்தார். நீதிமன்ற காவல் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர், தனது கடமைகளை கைவிட்டுச் சென்றே இதனைச் செய்துள்ளார்.

சிறிதுநேரம் பொலிஸ் நிலையத்தில் அவரை தடுத்து வைத்த பொலிஸார் பின்னர், தாங்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கின்றோம் என்றுகூறி அவரை விடுவித்துள்ளனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் அறிந்து கொண்ட ஊடகவியலாளர், அது தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக குறித்த தேநீர்க் கடைக்குச் சென்றுள்ளார்.

அதன்போது ஊடகவியலாளரும் கடைக்கு முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு கடைக்காரரிடம் சம்பவம் தொடர்பில் விசாரிக்க முற்பட்டபோது, நீதிமன்ற காவல் கடமையில் இருந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் , அங்கிருந்து வந்து ஊடகவியலாளருடன் முரண்பட முனைந்துள்ளார்.

அதன்போது, தான் ஊடகவியலாளர் என அடையாளப்படுத்தியபோது, மோட்டார் சைக்கிளை இந்த இடத்தில் நிறுத்த வேண்டாம் என்றும் அது நீதிமன்ற உத்தரவு என்றும் கூறியுள்ளார். அதற்கு, ஊடகவியலாளர் எங்கே மோட்டார் சைக்கிளை நிறுத்துவது என்று கேட்டபோது, பொலிஸ் நிலையத்துக்குள் நிறுத்துங்கள் என்று கூறியுள்ளார்.

அதனையடுத்து ஊடகவியலாளர் பொலிஸ் நிலையத்துக்குள் மோட்டார் சைக்கிளை கொண்டுசென்று நிறுத்தியபோது, கடைக்காரனுடன் கதைக்க வேண்டாம், இங்கிருந்து செல்லுங்கள் என அச்சுறுத்தும் வகையில் கூறியுள்ளார்.

அதனைச் செவிசாய்க்காது ஊடகவியலாளர் கடைக்குள் சென்றபோது, பொலிஸ் நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்து பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச் சாட்டில் கைதுசெய்வேன் என மிரட்டியுள் ளார். அதற்கு ஊடகவியலாளர், தான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை சந்திக்கிறேன் என்று கூறியபோது, தனது துப்பாக்கியை எடுத்து ஊடகவியலாளரை நோக்கி நீட்டி "யாருக்கும் பயப்பட மாட்டேன், பொலிஸ் நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்தவரை சுட்டேன்" என கூறுவேன் என மிரட்டியுள்ளார்.

அதன்போது அங்கு வந்த மற்றைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளரை மிரட்டிய சக பொலிஸ் உத்தியோகத்தரை சமரசப்படுத்தியதுடன், ஊடகவியலாளரை அங்கிருந்து செல்லுமாறும், பொறுப்பதிகாரி காங்கேசன்துறை சென்றுள்ளார், அவர் மாலைவேளை இங்கு வந்தபின்னர் வந்து கதைக்குமாறும் கூறி அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தநிலையில் பிற்பகல் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்த பொறுப்பதிகாரி, ஊடகவியலாளரை அழைத்து சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரையும் ஊடகவியலாளரையும் சமரசப்படுத்த முயற்சித்தார்.

எனினும், சம்பவம் தொடர்பில் அறிந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி, ஊடகவியலாளர் தகவலைப் பெற்றுக்கொள்ளும் உரிமையைத் தடுத்தமை மற்றும் அச்சுறுத்தியமை தொடர்பில் முறைப்பாட்டைப் பெற்றுக்கொண்டு விசாரணைகளை முன்னெடுப்பது பொலிஸாரின் கடமை என அறிவுறுத்தினார். அதனையடுத்து ஊடகவியலாளரிடம் பருத்தித்துறை பொலிஸார் முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்டனர். (த-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கு எச்.ஐ.வி. இலங்கையில் முற்றாகத் தடுப்பு

**வவுனியா, டிசெ.3**

**15 வயதுக்குட்பட்டவர்களுக்கு எச்.ஐ.வி. தொற்று ஏற்படுவதை, தடுத்த நாடாக இலங்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று - வவுனியா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி இ.ராகுலன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வருடாவருடம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி உலக எய்ட்ஸ் தடுப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா மாவட்டத்திலும் எய்ட்ஸ்நோய் தடுப்பு செயற்றிட்டமானது சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது. உலகளாவியரீதியில் இது வரையில் 38 மில்லியன் எச்.ஐ.வி. நோயாளர்கள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளனர்.

இவர்களில் 1.7 மில்லியன் நோயாளர்கள் 15 வயதுக்கு குறைந்தவர் கள். அதன் அடிப்படையில், குழந்தைக்கு தொற்று ஏற்படுவதைத் தடுத்த ஒரு நாடாக 2019 ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தால் இலங்கைக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டுக்குப் பின்னர், எந்த விதத்தி லும் 15 வயதுக்கு உட்பட்டவர்கள் அடையாளம் காணப்பட வில்லை. அதனை அடிப்படையாகக் கொண்டு, அந்தச் சான்றிதழ் வழங்கப் பட்டது.

அதனை ஆராய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் வவுனியாவும் ஒன்று - என்றார். (ஒ-4-18)

# வீடு புகுந்த நாகத்தை கையால் பிடித்த பெண்

## கோண்டாவிலில் சம்பவம்



யாழ்ப்பாணம், டிசெ.3

வீட்டுக்குள் புகுந்த நாகபாம்பு ஒன்றைக் கையால் பிடித்துள்ளார் பெண் ஒருவர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கோண்டாவிலில் உள்ள வீடொன்றில் நடந்துள்ளது.

சுமார் 6 அடி நீளமான நாகபாம்பு ஒன்று வீட்டுக்குள் புகுந்துள்ளது. வீட்டில் இருந்த பெண் பதறியடிக்காது, அந்தப் பாம்பைக் கையால் பிடித்து அடைத்துள்ளார். அந்தப் பாம்பு பின்னர் செம்மணி வெளியில் விடப்பட்டது என்று வீட்டார் தெரிவித்தனர்.

(எ-இ)


**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள Bajaj Discovery 125 (2005) bike விற்பனைக்கு (JT-XXXX)

(cs.41387) (2.6) **077 234 3505**

**தவறவிடப்பட்டுள்ளது**

BER 7690 எனும் இலக்க மோட்டார் சைக்கிளின் காப்புறுதி அட்டை, வரி அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய கவர் ஒன்று சண்டிலிப்பாய்க்கும் கொக்குவிலுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் இலக்கத்தில் தொடர்புகொள்ளுமாறு மிகவும் தயவாக கேட்டுக்கொள்கின்றேன்.

(cs 41390) (2.6) **077 739 3046**

**BARATHY**

பிரதான வீதி-சித்தன்கேணி
(சிவன்கோயில் அருகாமை)

**O/L DAY CLASS**

**புதிய பிரிவு ஆரம்பம்: 06.12.2021**
**திங்கள் காலை 8.00 மணி**

எமது வழமையான தனித்துவமான ஆசிரியர் குழுவினால் சென்ற ஆண்டுபோல் இவ்வாண்டும் 60 மாணவர்கட்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்

**அனுமதிக்கு முந்துங்கள்**
மேலதிக விவரங்களுக்கு
**077 376 3511**

**Note:** மாலை நேர வகுப்பு தரம் 9.10,11
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(CR 5672)1-6

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இங்கும் கிப்ற் அன் பான்சி நிலையத்திற்கு விற்பனையாளர்கள் (பெண்) தேவை.
அனுபவம் உள்ளவர்கள் மற்றும் அனுபவமில்லாதவர்களும் தொடர்பு கொள்ளவும். (CS 733) 1-6

தொடர்களுக்கு: **077 4939 799**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மயிலிட்டி B.C.றோட், சாந்த சந்தி அருகாமை யில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

Call (CS 736) 1-6

**076 890 9259, 077 015 0353**

**தச்சு தொழிலாளர் தேவை**
**Carpenter Vacancy**

யாழில் உள்ள முன்னணி கட்டட நிர்மான நிறுவன மொன்றிற்கு, நாள் ஊதியத்திற்கு வேலை செய்வதற்கு அனுபவமுள்ள தச்சு தொழிலாளர்கள் மற்றும் உதவியாளர்கள் தேவை. (CS 41392 1-6

**தொடர்பு: 0777 614441**

**BARATHY**

பிரதான வீதி-சித்தன்கேணி
(சிவன்கோயில் அருகாமை)

**A/L 2023**
**கலை - வர்த்தகம்**
**பிரிவு - 2 ஆரம்பம்**
**நாளை-04.12.2021 சனிக்கிழமை**

யாழ்ப்பாணத்தின் பிரபல ஆசான்கள் இணைந்து கற்பிக்கும் வலி மேற்கின் தனித்துவமான நிறுவனம்

பொருளியல் - R. தர்ஷன்
கணக்கீடு - V. திருக்குமரன்
வணிகக் கல்வி - S.K.பாலசபேஷ்
I.C.T. - T. தேவதர்சன்
தமிழ் - N. சத்தியவேந்தன்
புவியியல் - P.S. குமரன்
வரலாறு - K. சுதன்
அரசியல் - S.கோகுலன்
ஊடகவியல் - N.கஜிதரன்
இந்து நாகரிகம் - A. மேனன்
அளவையியல் - E.S.பவன்
கிறிஸ்தவம் - A. யுபின்சன்
விவசாயம் - S. சஜீவன்
நாடகம் - T. ஜெயசுதன்
சித்திரம் - S. சபேசன்

**Note:** 35 வருடங்களுக்கும் மேலாக இன்று வரை பல ஆயிரக்கணக்கான மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைத்த பெருமை சித்தன்கேணியில் இந் நிறுவனத்திற்கு மட்டுமே உண்டு என்பதனை கடந்தகால மாணவர்களும் பெற்றோர்களும் அறிவீர்கள். நீங்களும் சிறந்த பெறுபேறுகளை பெற்றிட யாழ் மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர்களிடம் கற்றுக் கொள்ளுங்கள்

உங்களது புதிய அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்

(CR5572 B) 1)

**பொருளியற் கல்லூரி**

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். K.K.S. வீதி, சுன்னாகம்
(இரு இடங்களிலும்)

**A/L 2023**
**கலை - வர்த்தகம்**
**பிரிவு - 2 ஆரம்பம்**
**நாளை-04.12.2021 சனிக்கிழமை**

நீங்கள் நன்கு அறிந்த யாழ் மாவட்டத்தின் முன்னணி ஆசான்களினால்

பொருளியல் - R. தர்ஷன்
கணக்கீடு - B. முகுந்தன்
வணிகக் கல்வி - S.பிரதீபன்
I.C.T. - R. சுதர்ஷன், S. விதுஷன்
தமிழ் - N. சத்தியவேந்தன்
இந்து நாகரிகம் - P. ஜோதீஸ்வரன், A. மேனன்
புவியியல் - P.S. குமரன்
அரசியல் - S. கோகுலன்
வரலாறு - K. சுதன்
ஊடகவியல் - N. கஜிதரன்
அளவையியல் - S. சயந்தன், N.ஜெயசுரேஸ்
நாடகம் - T. ஜெயசுதன்
விவசாயம் - S. சஜீவன்
கிறிஸ்தவம் - A. யுபின்சன்
இந்துசமயம் - A. மேனன்
சித்திரம் - S. சபேசன்
சங்கீதம் - S. குமுதினி
மனைப்பொருளியல் - K.றஜீதா
ஆங்கிலம் - N.நிஷாந்தன்

நீங்கள் விரும்பிய இடங்களில் அனுமதிகளை பெற்று கொள்ளலாம்.

(CR5572 A) 1)


# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 01 . 1933



மறைவு 01 . 12 . 2021

## முத்துக்குமார் சபாபதிப்பிள்ளை

நல்லூர் யாழ்ப்பாணம் என்னும் இடத்தினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் முத்துக்குமார் சபாபதிப்பிள்ளை அவர்கள் 01.12.2021 புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முத்துக்குமார் இராசம்மா அவர்களின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற தியாகேசப்பிள்ளை மற்றும் யோகேஸ்வரி, ஆனந்தகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், உருத்திரன் (கனடா), கவிதா (கனடா), தூயவன் (மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுஜீபா, றஞ்சன் ஆகியோரின் மாமாவும், அஸ்வின், ஆகாஸ் ஜேடன், ஜெரூசா ஆகியோரின் பாசமிகு பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.12.2021) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள்**
**தூயவன், உருத்திரன், கவிதா**

(CS 730) 1-6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.